# தென்றல்

ஆசிரியர்:— கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 27—8—55 | சனிக்கிழமை | இதழ் 11


## கடற்கரையில் அண்ணா


—கண்ணதாசன்—


மங்கையர் சிரிப்பினுள்ளே வாலிபக் கவர்ச்சி தேங்கும்
வாணிகர் சிரிப்பினூடே வாணிபத் திறமை தேங்கும்
பொங்குமென் அருமை அண்ணாப் புலவனின் சிரிப்பினுள்ளே
சங்கமுத்தமிழும் நாட்டுச் சனத்திரள் யாவுந் தேங்கும் !

கண்படுதூரம் மட்டும் காளையர் கூட்டம்—என்றும்
மண்படு கடலோரத்தில் வளர்தலைப் பெருக்கம்—அங்கு
பண்படு மொழியான் எங்கள் பைந்தமிழ் அமுதச்சொல்லன்
1 தன்படைப் பெருக்கத்தால்இத் தாரணி சிறுக்கக் கண்டான் !

★

வீசுமென் தென்றல் போலும் வெண்ணில வொளியே போலும்
காசறு மலரின் மேவும் கவின்கலை மணமே போலும்
பாசமும் அறிவும் சேர்க்கும் பனிமொழி அடுக்கை வாரி
வீசினான் பலபேர் அஃது பாட்டென விளம்பிப் போனார் !

1 *''பார்சிறுத்தலிற் படைபெருத்தவோ
படைபெருத்தலிற் பார்சிறுத்தவோ''* என்னும் பழம்பாடல் *இவ்வாறு கையாளப்பட்டது.*

# சாகாதே! செத்துவிடுவேன்!

அன்புள்ள அத்தானுக்கு,

சூதுக்காரர்களால் பிரிக்கப்பட்ட பொன்மலர் வரைந்த கண்ணீர் பட்டயம். பிரிக்கப்பட்டாலும் உங்களை நான் அத்தான் என்றே தான் அழைக்கிறேன்--என்றும் அழைப்பேன். நிலவிற்கும், தாமரைக்கும் இடையிலே நீண்ட தொலைவு இருந்தாலும், அவை இரண்டுக்கும், இடையே கண்களுக்குப் புலப்படாத ஒரு இணைப்பு இருக்கிறதல்லவா! அதே இணைப்பு நம் இருவருக்குமிடையே இருக்கிறதாகவே நான் உணருகிறேன். அதனால் தான் **அத்தான்** என்று பாசத்தோடு எழுதியிருக்கிறேன். தொட்டு, தோள் தழுவி இருக்கமுடியாத நிலை நம்மிடையே பிறந்துவிட்டாலும், இட்டழைத்த முறையை--அந்த உறவு முறையை எப்படி **அத்தான்** என்னால் மறக்கமுடியும்!

என்னைச்சுற்றி, எத்தனைக் கட்டுக்காவல் இருந்தாலும், என்னுடைய தினசரி நடவடிக்கைகளை எத்தனை பேர் உற்றுக் கவனித்து வந்தாலும், கடந்த நான்காண்டு காலத்திற்குப் பிறகு சென்ற வாரம் தங்களைச் சந்திப்பதென உறுதி பூண்டிருந்தேன். என்னுடைய அந்தத் துணிவு பயங்கரமானது தான். ஒரு பருவப்பெண், அதுவும் பாதிராத்திரி வேளையில் வீட்டை விட்டுக் கிளம்பி வருவது என்பதைச் 'சாதாரணத் துணிவு' என்று சொல்ல முடியுமா? அவ்வாறு துணிந்து வந்தும் நான் கண்ட இன்பந்தான் என்ன? தங்களைச் சந்திக்க முடிந்ததா? என் இதயபாரத்தை இறக்கிக்கொள்ள முடிந்ததா? என் கண்களைத்தான் சுத்தப்படுத்திக் கொண்டேனா? அந்த நள்ளிரவில் எனக்கு எப்படித்தான் தைரியம் வந்ததோ தெரியவில்லை! ஆளில்லாத நேரத்தில் அடுப்பங்கரைக்குப் போக அஞ்சும் நான், காரிருள் வேளையில் வீடு தாண்டி, கழனி சடந்து காட்டுப் பாதையின் வேலியோரத்திற்கு வந்திருந்தேன். கேரளநாட்டைச் சேர்ந்த ரசாயன வைத்தியன் ஒருவனை அந்த இடத்தில்தான் குத்திக் கொன்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வைத்தியன் சாகடிக்கப்பட்டு சாத்திக் கிடந்த அந்தப் பெரிய ஆலமரத்திற்கு **'மலையாளத்தான் மரம்'** என்று தான் பெயர். இந்த அபாக்யவதி, அந்த மலையாளத்தான் மரத்தடியில் எவ்வளவு துணிவோடு தனியாக நின்றாள் தெரியுமா? காதலை, கண்ணுக்குத் தெரியாத ஒரு மாயசக்தி என்கிறார்கள். அந்த மாயசக்திக்குள் எவ்வளவு துணிவு, வைரநெஞ்சம், ஒளிந்து கிடக்கின்றது? அக்காவிடம், பள்ளித்தோழி வள்ளியம்மையை பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன்--எவ்வளவு நேரம்தான் 'தோழி' (!) யைச் சந்திக்க ஆலமரத்தடியில் நிற்பது!

சற்று தூரத்திலே, மின்மினிப் பூச்சிபோன்ற நெருப்புத் தெரிந்தது. 'வந்துவிட்டேன், வருந்தாதே' என்று ஓசையில்லாமல் அறிவிக்கும் உங்களது 'சிகரெட்' நெருப்பு என்றுதான் நான் அதை முதலில் எண்ணினேன். ஆனால் குறிப்பிட்ட இடம் வந்ததும் அந்த நெருப்பு அணைந்துவிட்டது. அந்த நேரத்தில், இருளில் இருள் கலந்தாற்போல் ஒரு தோற்றம் என் கண்ணில் பட்டது. நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள். இளம் இதயத்தை கசக்கிவிட்டீர்கள். இதயத்தைக் கருக்கி அந்தப் புகையை சந்தன வாடையாக நுகரும் வைதீகர்களின் உள்ளங்களைக் காட்டிலும், காதலியை ஏமாற்றுவோரின் உள்ளம் கொடுமை நிறைந்ததோ? சஞ்சலப்படாதீர்கள் அத்தான்; இது சாதலுக்கும் துணிந்தவளின் காதற் புலம்பல்!

எப்படியோ அன்று என்னை பார்ப்பதற்கு ஒப்புக்கொண்டீர்கள். ஆசை மிகுதியால் ஓடோடி வந்தேன்; சீவி முடித்து, சிரித்தமுகம் சேகரித்து, செத்துப்போன என் சிற்றன்னை வைத்துப்போன கருப்பு ஜரிகைப்புடவை உடுத்தி வந்திருந்தேன்; காத்திருந்தேன்; ஆனால் முடிவிலே நொந்துபோய், வெந்த சாம்பலாய் வீடுதிரும்பினேன்.

மறுநாள் காலை நீங்கள் இலங்கைக்குப் புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்பட்டேன். என் வயிற்றில்--புலிக்குகையில் தீப்பற்றியது. நீங்கள் இனி பிறந்த ஊருக்கு எப்போது வரப்போகிறீர்கள்? அப்போதாவது என் அன்பழைப்பை ஏற்று என்னைச் சந்திப்பீர்களா? அதுவரை நான் உயிரோடு இருப்பேனா? நம்பிக்கையில்லை அத்தான்! வாளுக்கு இரையாகும் வைரியின் சடலத்தைப்போல, தினம், தினம், வஞ்சகத்திற்கும் வசைமொழிக்கும் ஏக்கத்திற்கும் என் உடல் இரையாகிக்கொண்டு வருகிறதே!

எனக்குத் திருமணப் பேச்சு நடைபெறுகிறது; திண்ணையில் நடைபெறும் அந்த உரையாடல் என் உள்ளத்தில் எண்ணெயக் காய்ச்சி ஊற்றுகிறது. விளக்கிலே எண்ணெயிருந்தாலும் தூண்டுகோல் இல்லையே! தூண்டுகோல் இல்லாத விளக்கு போல் என் வாழ்வு அணையப் போகிறது. விளக்கு அணைவதற்குள் அதன் இறுதி ஜோதியின் முன் உங்கள் ஒளி முகத்தைக் காண்பியுங்கள். திருமுகத்தை-அதில் ஊஞ்சலாடும் குறுநகையை நான் பார்த்து விட்டுச் சாகிறேன். அனுமதிப்பீர்களா?

பிரிக்கப்பட்ட

**பொன்மலர்.**

பொன்மலரே,

உன்னுடைய நெஞ்சச் சுமையை வெடவெடக்கும் கரங்கள், வேல் போன்ற பேனா-இவைகளின் துணை கொண்டு தீட்டிக் காட்டிய மடங்கல் கிடைக்கப்பெற்றேன். ஐம்பது திங்கள்களாக மறந்திருந்த உன்னையும், உனக்கும் எனக்கும் இடையிலே நடைபெற்ற கடந்த கால நிகழ்ச்சிகளையும் அந்தக் கடிதம் ஓரளவுக்கு நினைவுப்படுத்த உதவியது.

நீதான் எனக்கு இல்லாளாக வரவேண்டும் என்று நான் எண்ணி ஏங்கியிருந்தேனே, அந்தக் காலத்திலெல்லாம் உன்னைச் சார்ந்தவர்கள் என்னை ஏளனமாகக் கருதியதை இன்று நீ தீட்டியிருக்கும் சோகக் கடிதம் மறைத்து விடும் என்று கருதுகிறாயா? கிடக்கிறான் வகையற்றவன் என்ற கேலி மொழிகளை உன்னுடைய உணர்ச்சி வயப்பட்ட எழுத்துக்கள் விழுங்கி விடுமென்ற எண்ணமா உனக்கு? ஒரு காலத்தில் உனக்காக தவம் கிடந்தேன்; என்

## இரு கடிதங்கள்

## தென்னரசு

னுடைய ஓட்டை குடிசையில் நீ கொலு வீற்றிருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்; அந்தக் காலமா, இந்தக் காலம்! நீயும் நானும் அப்போதிருந்த நிலையிலேயா இன்றிருக்கிறோம்? அன்று, முட்டைதான் உலகம் என்று எண்ணும் சிட்டுக்குருவியாக இருந்தேன்; இன்று, மூடிவைக்கமுடியாத பரப்பளவு கொண்டது இந்த வையம், என்று உணர்ந்தவனாக அல்லவா இருக்கிறேன்!

அன்றும் சரி, இன்றும் சரி, காதலிக்கத்தான் பிறந்தோம் என்று நான் எண்ணியதில்லை. 'வாழ்க்கை ஏட்டிலே ஒரு அத்தியாயம் திருமணம்; அந்த அத்தியாயத்தை பெற்றோரை விட்டே தீட்டவிடாமல் தாமே தீட்டிக் கொள்ள முனையும் போதுதான் காதல் இடம் பெறுகிறது'-இது என் சொந்தக் கருத்து, அதிலே வெற்றி தோல்வி காதலர்களின் மனோ நிலையைப் பொறுத்ததுதான். நம்மிடையே கருத்து வேறுபாடு இல்லையே; அப்படிஇருந்தும் ஏன் மறுக்கிறீர்கள் என்று நீ கேட்கக்கூடும். ஏறத்தாழ ஐந்தாண்டுகாலமாக உன்னைப்பற்றிய தகவல் எனக்கு அணுவளவும் தெரியவில்லை. இரும்புக் கோட்டைக்குள் பூட்டி வைக்கப்பட்டவளைப் போல நீ இருந்தாய்-உன்னிலை நானறியேன்-நான் என்ன செய்ய முடியும்? காதலின்பத்தைக் காட்டிலும் பேரின்பந்தரக்கூடிய பொதுத் தொண்டிலே என்க்கு நாட்டம் சென்று விட்டது. மக்கள் மன்றம் எழுப்பும் பேரொலி, மான் விழியாளின் மதுர கீதத்தைக் காட்டிலும் இனிமையாகப் படுகிறது. புத்தகங்களை வாங்கி, எனக்கு முன்னே குவித்து வைத்துப் படித்துக்கொண்டே உன்னை மறந்தேன்-உன்னை நினைப்பதில்லை. உன் வீட்டைப் பார்ப்பதில்லை. உன் வீட்டுப் பக்கமே நடப்பதில்லை. நீ என்னைப் பார்க்கக்கூடாது- என் மீது உன் ஆசை படியக்கூடாது என்பதற்காகத்தான். என் இதயத்திலே இன்று உனக்கு ஒரு புதியஇடத்தை அளித்திருக்கிறேன். காதலியாக அல்ல! காதலியாக அல்ல!

இவ்வளவுக்குப் பிறகு, நீ நேற்றையக் கடிதத்தில், தாங்கள்தான் என்னை மணக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறாய்; எப்படி முடியும் பொன்மலரே!

நீ குறிப்பிட்டிருந்தபடி சென்ற வாரம் உன்னைப் பார்க்க, நீசொல்லியிருந்த இடத்திற்கு வந்தேன். நடுநிசி! பாதை தெரியவில்லை! என்னுடைய சிகரெட் நெருப்புத்தான் எனக்கு வழி காட்டியது. வந்தவர் ஏன் என்னைப் பார்க்கவில்லை என்கிறாயா? பார்க்கத்தான் வந்தேன். நீயும் எனக்காக அந்த நள்ளிரவில் காத்திருந்தாய் என்று எனக்கு நன்கு தெரியும். அந்தக் கள்ளிக் காட்டில், கரம்பைச் சரிவில் திருவரங்கத்துக் கதம்பம் என்மூக்கைத் துளைத்ததே! நீ இருக்கும் இடம்

(8-ம் பக்கம்)


மாநில மாநாட்டு நிதிக்காக

4—9—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு

கோகலே மன்றத்தில்

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி.

அவர்கள் தலைமையில்

கலைஞர் கருணாநிதி

அவர்கள்

சொற்பொழிவாற்றுவார்கள்

நன்கொடை: ரூ. 1, அணா 8.

அனைவரும் வருக! சென்னைமாவட்ட தி. மு. க.

இளம்பரிதி,

செ. மா. செயலாளர்.

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தைஎன(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

# எண்ணம்

## கண்ணதாசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருங்கூட்டத்தைக் கண்டு வயிறு எரிபவர்கள் பலர். அதிலே முதலிடம் பெறுவோர், நமது அருமைக் கம்யூனிஸ்ட் 'திருவாளத்தார்'கள் ! தென்னாட்டில் 'நாளுக்கு நாளதிகம் நகர்ந்ததடி அம்மானை' என்கிற ரீதியில் கம்யூனிஸ்ட்டுக் கட்சி கரைந்து வருவதும், முன்னேற்றக்கழகம் வளர்ந்துவருவதும் அவர்களது கண்களில் நெருப்பை அள்ளிக்கொட்டியதுபோல் இருக்கிறது.

தனி மேடைகள் போட்டு, சண்டப் பிரசண்டம் செய்யும்போதெல்லாம், அந்தக் கூட்டங்களில் நமது கம்யூனிஸ்ட்டுகள் சந்திக்கும் மக்களின் தொகை ஐநூறுக்கும் குறைவாகவே இருக்கும் என்பது நாடு நன்றாக அறிந்த உண்மை. ஜீவானந்தம் புலிமாதிரி குதிப்பார்; மேடை அதிரும் - எதிரே மக்கள் இருக்கமாட்டார்கள் ! 'ரஷ்யாவின் உத்தரவுப்படி' பேசிவிட்டு இறங்குவார். "வர்க்கப்போர்-முதலாளித்துவம், சர்வதேசக் கண்ணோட்டம் - யதார்த்தவாதம்" முதலிய வழக்கமான வார்த்தைகளைப் போட்டு உருட்டுவதே அவர்களது மேடைப்பேச்சின் சாராம்சம் என்பதை உணர்ந்திருக்கிற காரணத்தாலே, மக்கள், கம்யூனிஸ்டுகளின் கூட்டங்களுக்குப் போவதில்லை. தினசரி அவர்கள் காணும் இந்தக் காட்சியை முன்னேற்றக் கழகத்துக் கூட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து வயிறெரிகிறார்கள்.

சமீபத்தில் சென்னையிலே, கோவா கண்டன ஊர்வலமொன்று நடந்து, மாலையில் கடற்கரையில் கண்டனக் கூட்டமும் நடைபெற்றது ! இதிலே கலந்துகொண்டவர்கள் இரண்டு லட்சம் என்றால், முன்னேற்றக் கழக அனுதாபிகள், ஆதரவாளர்கள், அக்கரைகொண்டவர்கள் சுமார் ஒன்றரை லட்சம் இருக்கும் ! ஊர்வலத்தில் வந்த கொடிகளில் உருப்படியாகத் தெரிந்த கொடிகள் பலவும் முன்னேற்றக் கழகத்தின் கொடிகள் தான். முன்னேற்றக்கழகம் கலந்துகொள்வதாக அறிக்கை வெளியிட்டதும் ஆங்காங்குள்ள அத்தனை கிளைக்கழகங்களும் மன்றங்களும் அந்தப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளத் தயாராயின. சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இளம்பரிதியும் மற்றையோரும் பெருத்த அக்கரை காட்டினார்கள். ஆர்வத்தில் தி. மு. க. வினர் பலரும் அதில் கலந்துகொண்டார்கள். எண்ணிச்சொன்னால், கம்யூனிஸ்டுக் கொடிகள் அதில் எத்தனை இருக்கும் ? இதைப் பார்த்தபடி வந்த ஜீவானந்தரின் கண்களில் அனல் பறந்தது! "நாம் இருக்குமிடம் தெரியவில்லையே !" என்று உடம்பு பற்றி எரிந்தது. கனல் கக்கியபடியே கூட்டத்திற்கு வந்தார். கூட்டத்தில், மேடையின்மீது காங்கிரஸ் கொடியும் கம்யூனிஸ்டுக் கொடியும் பறந்துகொண்டிருந்தன. இரண்டு கொடிகள் பறக்கும்போது, நம் கொடியும் பறக்கவேண்டும் என்று முன்னேற்றக் கழகத்தினர் விரும்பி தங்கள் கொடியை மேடையருகில் கொண்டுபோனார்கள். மனிதத்தன்மையும் அறிவும் கொண்டவர்கள் இது 'நியாயந்தான்' என ஒப்புவர். ஆனால், ஜீவானந்தர், புரட்சி வீரர் ஆயிற்றே ! அந்த 'விசால நோக்கு'டையார் மனிதத்தன்மைக்குப் புறம்பாக, முன்னேற்றக் கழகக் கொடிகள் கூடாதென்று தடுத்தார். "நாங்களும் காங்கிரஸ்காரர்களும்தான் மேடை அமைத்துள்ளோம்." என்று விசித்திரமாக வாதிட்டார். கூடியிருந்த பெருங்கூட்டம் இந்தக் கீழ்த்தர வாதத்தை எதிர்த்துக் கூச்சலிட்டது. அப்போது ஜீவானந்தரின் வெறி உணர்ச்சி, சம்மதிக்கவில்லை. உடனே, ஒரு குழுவினர் தங்கள் கொடியை மேடையருகில் நட்டனர். அடுத்த கணம், சில கம்யூனிஸ்ட் 'அடியாட்'களும் காங்கிரஸ்காரர்களும் பந்தலின்மீது ஏறி, கொடி நட்டனர். பந்தல் சாய்ந்தது. இதுதான் நடந்தது.

பிறகு, கூட்டத்தில் என். வி. நடராசன் பேசினார். அவர் பேசி முடிந்ததும் பெருங்கூட்டமும் கலைந்தது. மிச்சம் இருந்த கடற்கரை மணலைப் பார்த்தபடி ஜீவானந்தம் கதறினார் !-கண்டோர்-கேட்டோர் அனைவருக்கும் இது தெரியும்.

இத்தனை உண்மைகளையும் மறைத்து, ஜனசக்தியார் ஒரு புதுமையான செய்தியை-வெளியிட்டிருக்கிறார். கூடிய கூட்டம் இரண்டு லட்சமாம்-அதில்-தி. மு. க. வினர் இரண்டாயிரம் தானாம் ! பாக்கியெல்லாம் யாராம் ? கம்யூனிஸ்டுகள் என்று ஜீவானந்தம் கருதமாட்டார், ஏனென்றால், அத்தனை பேருக்கும் சம்பளம் கொடுப்பதென்பது நடவாத காரியம்! பலதரப்பட்ட மக்கள் என்று சாதிக்க முயல்கிறார். அன்று மட்டும் முன்னேற்றக் கழகம் அதில் கலந்துகொள்ளாமல் இருந்திருந்தால் தெரியும் வேடிக்கை ! எப்போதும்போல, கம்யூனிஸ்டுகளும் காங்கிரஸ்காரர்களும் பள்ளிச்சிறுவர்களை அழைக்கவேண்டியிருந்திருக்கும் !

"அவர்கள் கண்ணியம் காற்றில் பறந்தது" என்று தலைப்புத் தருகிறார் ஜனசக்தியார்; அதன்மூலம் நமக்குக் கண்ணியம் இருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறார். போகட்டும். தண்டவாளம் பிடுங்காத கண்ணியம், கட்சி மாறியவனை துன்புறுத்தாத கண்ணியம் நம்மிடம் இருந்தது என்பதையாவது ஒப்புக்கொள்கிறாரே !

அந்தப் பொது மேடையைக் கட்சி மேடையாக்க முயன்றார்களாம் தி. மு. க வினர். இதுவும் ஜனசக்தியார் திருவாசகம். தி.மு. க. வினர் மேடை கிடைக்காமல் தேடி அலைவதாக ஜனசக்தியார் எண்ணம்போலும்! ஒருவேளை, தன் முகத்தையே கண்ணாடியில் காண்கிறாரோ ! அந்தப் பசி, கம்யூனிஸ்டுகளுக்குத்தானே உண்டு !

பொதுமக்கள் புத்தி கற்பித்தார்களாம்-விலகிப்போய், தி. மு. க வினர் மீண்டும் வந்து கலந்துகொண்டார்களாம் வேறு வழியில்லாமல்! ஆத்திரத்தில், ஓலமிடுகிறார் ஜனசக்தியார் ! கூடியிருந்தவர்கள் யாரும் ஜனசக்தி படிப்பவர்களல்ல என்கிற தைரியத்தில் எழுதுகிறார்! நடந்ததை நாடறியும், "...இமயம் முதல் குமரிவரை வீரத்தியாகத் தொண்டர்கள் ஒன்றாக நின்று கோவாவில் தியாக ரத்தம் சொட்டுவது தி. மு. கவின் இனவெறித் தத்துவத்திற்கு ஒரு மாபெரும் மரண அடி இல்லையா !" என்று யாரையோ பார்த்துக் கேட்கிறார். இதன் மூலம் திராவிடநாட்டுப் பிரச்சினையையே சாய்த்துவிட்டதாகத் தலை நிமிர்ந்து பார்க்கிறார் ! புல்கானினிடம் இதைச் சொல்ல நினைக்கிறார் !- கோவாவிலே ரத்தம் சொட்டுவதற்கும் திராவிடநாட்டுப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் ! மடிந்துவரும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத்தான் வெளிச்சம் !

கோவா மக்கள் அன்னிய ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவிக்கப் படவேண்டும் - இது விடுதலை ஆர்வமுள்ள எல்லோருக்கும் உள்ள ஆசை. ஒரு ஏகாதிபத்தியத்திடமிருந்து இன்னொரு ஏகாதிபத்தியத்திற்கு நாட்டைக் கைமாற்ற நினைக்கும் ஏஜண்டுகள்தான் இந்தப் பிரச்சினையை ஜனசக்தியார் முறையில் அணுகுவார்கள் ! விடுதலை வேட்கை உள்ளவர்கள் இதனை தங்களுக்கும் வெற்றியாகவும், தங்களுக்குக் காட்டப்படும் வழியாகவும்தான் கருதுவார்கள். கோவாவில் நடப்பது, திராவிடநாட்டுப் பிரச்சினைக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கலாம். ஆனால், வடக்கு ஏகாதிபத்திய வெறியர்களிடமிருந்து திராவிடத்தை மீட்பதற்குப் போராடும் கொள்கைக்கு சகோதரன்தான் கோவாப் போராட்டம். இது, நமது பிரச்சினைக்கு மரண அடிஅல்ல- மணமாலை ! தாய்நாட்டு விசுவாசம் இருப்பதால் நாம் அப்படித்தான் கருதுகிறோம். வேற்று நாட்டிலிருந்து சம்பளம் வாங்கி விசுவாசம் காட்டுபவர்கள் இதை மரண அடியாகக் கருதுவதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

பொதுவாகவே, கம்யூனிஸ்டுகளுக்கும் வரலாற்று அறிவுக்கும் வெகுதூரம் போலும், இரண்டு வாரங்களுக்குமுன், எம். ஆர். வெங்கட்ராமன் என்னும் கம்யூனிஸ்டு நண்பர், "திராவிடம் என்பது சரித்திரத்துக்குப் புறம்பானது" என்று எழுதினார், இதை என்னென்று சொல்வது ! "சூன்யம்" என்றால் சிறுவர். "துரோகம்" என்றால் தாவிக் குதிப்பர். கையைக் காட்டி அதோ இருக்கிறது ஆரம்பப் பாடசாலை என்றுதான் கூறவேண்டும். ஏழைமக்களிடம் தானே நமது பிழைப்பு என்று, வரலாறு படிக்காமல் இருந்துவிடுவதால் ஏற்பட்ட விளைவுதான் இது ! ("ஆரியர்கள்" தி. மு. கவின் கற்பனையில் உள்ளவர்கள்" என்று எழுதுவோரை, ஆரம்ப வரலாறுகூடப் படிக்காதவர்கள் என்று கருதுவதில் என்ன தவறு !)

நேரு ரஷ்யா போய் வந்ததும் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை தலைகீழாகவே மாறிவிட்டது. காங்கிரஸுக்குப் பாதங் கழுவவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதனாலே அவர்களது கொஞ்சநஞ்ச 'பழைய நிலை'யும் கெட்டுவிட்டது. அதன் விளைவுதான் குழப்பமும் தாழ்வு மனப்பான்மையும் !

---

அடுத்த இதழில் :

"கம்யூனிஸ்டுகளின்

வரலாற்று அறிவு"

எதிர்பாருங்கள் !

# இலக்கியத்தில் காதல்

காரை முத்துப்புலவர்

இடைதான் அப்படி! நெற்றி எப்படி ?

பூவாளி வேந்தனும் 'மம்முதன்', தன் ஏ ஆளி-அதாவது அம்பு வரிசைகள் தீட்டும் இடமாம்! கண்ணைக் கணையாக்கினால் மேலுள்ள புருவத்தை வில்லாக்கினால், கணையைத் தீட்டி எடுத்த இடம் நெற்றி என்பது முழுப் பொருத்தமும் வாய்ந்த இயற்கை உவமை!

அது இது:

செந்தேன் மொழியாள்
செறிஅளக பந்தியின்கீழ்
இந்துமுறியென் றியம்புவார்-
வந்தென்றும்
பூவாளிவேந்தன் பொருவெஞ்
சிலைசார்த்தி
ஏவாளி தீட்டும் இடம்
—42—

இப்படியெல்லாம் நளமகாராசனிடம் தமயந்தியைப்பற்றி அன்னம் சொன்னதாம்! (அன்னம் எப்படிப் பேசிற்று என்று கேட்காதீர்கள். இதெல்லாம் 'கவிப்புளுகி'ல் தனிப் புளுகு!)

அன்னம் சொன்ன அழகு மங்கை தன்னைத்தானே அரசாண்டிருப்பதையும், அவள் இடை 'மோட்டிளங் கொங்கை'யைச் சுமந்தேற முடியாதே என்று சிலம்பு புலம்புவதையும், கணை தீட்டும் 'தீட்டுக் கல்'லான நெற்றி பற்றிய செய்தியையும் கேட்ட நளமகாராசனுக்கு உடம்பு 'என்னமோபோல்' இருக்கிறது.

"அன்னமே! நீ உரைத்த அன்னத்திற்கும் உனக்கும் என்ன உறவு?" என்று கேட்கிறான்.

உறவு கொஞ்சம் நெருங்கியதாயிருந்தால், வேலை சுலபமாக முடியுமே. என்ற சபலம்போலும்! உடனே அந்த அன்னம் கற்பனை ததும்ப, தனக்கும் அவளுக்கும் உள்ள உறவைச் சொல்கிறது!

"ஐயா நளமகாராசரே! நாங்கள் மலர்மாளிகையில் வாழ்ந்து வருகிற பறவை இனங்கள். அதாவது, தமயந்தியின் பெரிய மாளிகையில் வாழும் மயிலினங்கள்!--சேடிப் பெண்கள் மாதிரி! நாங்கள் என் அங்கே இருக்கிறோம் என்று கேட்பீர்! சொல்கிறேன் கேளும்: 'மம்முத'னுனவன், தன் தொழிலை அதாவது காதற்போர்த் தொழிலை எப்படி நடத்துவது - எப்படி ஏவுவது - என்பதை அறிய அவளது மாளிகையில் தங்கியுள்ளான்-ஆமாம்! அவள்தான் அதற்கு வாத்தியார்! நாங்கள் - அன்னங்களான நாங்கள்-அவளது நடையைக் கற்றுக்கொண்டு போக அங்கே தங்கியுள்ளோம்!" என்று முடிக்கிறது!

"அன்னத்துக்கும் நடை கற்பிக்கிறாள்! காமனுக்கும் படைத்தொழில் போதிக்கிறாள்! என்னே உலகம்! பெண்ணுக்குப் பெண் ணுசை கொள்ளவந்த பேராசிதான் போலும்!" எனத் தியங்குகிறான் நளமகாராசன்.

அன்னம் சொன்னது இது!

பூமனைவாய் வாழ்கின்ற
புட்குலங்கள் யாமவள்தன்
மாமனை வாய்வாழும்
மயிற்குலங்கள்-காமன்
படைகற்பான் வந்தடைந்தான்;
பைந்தொடியாள் பாத
நடை கற்பான்
வந்தடைந்தோம் நாம்
—44—

—இவ்வளவு சொன்ன பிறகும் காதல் பிறக்காமலிருக்குமா! பிறந்துவிட்டது! சராசரித் தலைவர்களின் பட்டியலில் சேருகிறான் நளமகாராசன்! வழக்கம்போல, நெஞ்சம் இற்றுவிடுகிறது! காதல் கொப்பளிக்கிறது! உடம்பு கனலாகிறது! 'ராஜா' என்கிற பெருமை - தலை தூக்கி நிற்கும் கம்பீரம்-அழிந்து சாதாரண மனிதர்களின் கல்யாண குணங்கள் வந்து சேருகின்றன. உடனே அன்னத்தைப் பார்த்து, அந்த-வெங்காமத் தீயுடைய நெஞ்சத்தான், "அன்னமே! உன் வாயில்தான் என் வாழ்வு நிற்கிறது" என்கிறான். "நீ 'உண்டு' என்றால் உயிர் உண்டு! 'இல்லை' என்றால் இல்லை!" என்பதுபோல் நிற்கிறான். 'போய்வா அன்னமே' என்று சொல்லாமல் சொல்கிறான். திரும்பி வந்து, சீதையைக் கண்டுவந்த குரங்கன்மாதிரி, "கண்டேன்" என்று துவங்கு! "ஒப்பினாள்" என்று துவங்கு! என்பதுபோல் பார்க்கிறான்.

இற்றது நெஞ்சம்
எழுந்த திருங்காதல்
அற்றதுமானம் அழிந்ததுநாண்-
மற்றினிஉன்
வாயுடைய தென்னுடைய
வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடை நெஞ்சுடையான் தேர்ந்து
—45—

அன்னம் மகிழ்கிறது. "அஞ்சாதே!" என்று அபயங் கொடுக்கிறது! எப்படி! "அவளை உன்னிடம் சேர்ப்பேன்!" என்று பொத்தாம் பொதுவிலா? இல்லை! கம்பனுக்கு சமகாலத்தவனல்லவா புகழேந்தி! கம்பனாது 'திருக்கல்யாண குணங்கள்' சிறிது ஒட்டியிருக்கலாமல்லவா! இந்த இடத்திலே அன்னத்தின் வாய்மொழியாக, கொஞ்சம் 'கருப்பொரு'ளையே எட்டிப்பிடிக்கிறான், புகழேந்தி!

"நளனே! வீமன் திருமடந்தை மென் முலையை உன்னுடைய அழகிய உயர்ந்த தோள்களிலே பொருந்தச் செய்கிறேன்!" என்கிறது அன்னம்! [இதில், 'மனோதத்துவ' அலட்டலில்லாமல் 'உடற்கூறு தத்துவ'த்திலேயே போய் ஒதுங்குகிறான், புகழேந்தி!

"அவள் மார்பு உன் தோள்களைத் தழுவும்! அஞ்சாதே! என்கிறது அன்னம்.

வீமன் திருமடந்தை
மென்முலையை உன்னுடைய
வாமநெடு ம்புயத்தே
வைகுவிப்பேன்-சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து
நீங்கியதே அன்னம்
ஒருங்கிடையாள் தன்பால் உயர்ந்து
—46—

அன்னம், பறந்தது. அது சென்ற திக்கையே நோக்கிக்கொண்டிருக்கிறான் நளன். அது கண்ணுக்கு மறைந்தது-சிறிதுநேரம் சென்றது. "இப்போது அன்னம் குண்டினபுரம் சென்றிருக்கும்" என்று நினைக்கிறான். இன்னும் சிறிது நேரம் சென்றது. "இப்பொழுது அன்னம் தமயந்தியைக் கண்டிருக்கும்" என்று நினைக்கிறான். மேலும் சில நாழி சென்றது. "இந்நேரம், எனது தணியாத காதல் பற்றி, அன்னம் தமயந்திக்குச் சொல்லியிருக்கும்" என நினைக்கிறான். பின்னும் கொஞ்சநேரம் சென்றது. "இப்போது எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு அன்னம் திரும்பியிருக்கும்" என்று நினைத்து நினைத்து-கற்பனை செய்து கற்பனைசெய்து-விம்முகிறான், நளமகாராசன்.

இதில் மனோதத்துவம் - அனுபவித்து வெளிவருகிறது-புகழேந்தியின் மனதிலிருந்து! யாரையாவது அவசரமாக எங்கேயாவது அனுப்பிவிட்டு, வாசலைப் பார்த்தபடியே அவர்கள் வருவதைப் பார்த்தபடி நிற்கும் நிலையில் - நிற்பவர்கள் மனது எப்படியிருக்குமோ, அப்படியிருக்கிறது நளன் நிலை.

அதை உணர்ந்து பாடியிருக்கிறான் புகழேந்தி.

இவ்வளவிற் செல்லுங்கொல்
இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற்காதல் இயம்புங்கொல்
-இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா
விம்மினான், மும்மதம்நின்
றுளுங்கொல் யானை அரசு
—47—

★

# காவியத்தைப் பழிக்கிறார்!

தெரு ஓரத்திலே, திருப்பத்திலே, சந்து முனைகளிலே, மேனி மினுக்கிகள், பம்பாய் பெருநகரிலே, ஏராளம் என்பதாக அண்மையிலே ஓர் செய்தி வெளியாகியுள்ளது. செய்தியை வெளியிட்டவர் சாதாரண மனிதரல்ல, பம்பாயின் முதலமைச்சர், மொரார்ஜி, தேசாய். விபச்சாரத்தால் விளையும் கேடுகள் குறித்து, சென்றவாரம் பம்பாய் பிரதேச இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில், பேசும்போது, அவர் தெரிவித்தாராம்.

"ரோமியோக்கள், ஒழிக்கப்பட்டால் ஜுலியட்டுகளும், தானே ஒழிந்து விடுவர்" என்றும் அவர் கூறுகிறார். தெரு வோரத்திலே மேனியை மினுக்கிக் கொண்டு, வருவோர், போவோர், உள்ளங்களிலே, உணர்ச்சியைத் தூண்டிவிடும், 'காமினிகள்' இல்லை என்றால், காமுகர்களும் இருக்க முடியாது என்கிறார். உண்மை! ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே. ஆனால் தேசாய் காட்டும் மேற்கோள்கள்?

கவி ஷேக்ஸ்பியர் தீட்டிய காதல் காவியத்தில் ரோமியோவும், ஜூலியட்டும், களங்கமற்ற விளக்குகள். அத்தகைய, உள்ளம் சேர்ந்த, உயிர் சேர்ந்த, ஓவியங்களை, தெருக்கடை விபச்சாரத்துக்கு, ஒப்புவமை கூறுவது, அதுவும் ஒரு மாநிலத்தின், பிரதமரே கூறுகிறார் என்றால், அவர், கற்றவை, கசடு அற்றது அல்ல என்பது தெளிவாகிறது.

உவமை என்பது, ஒருமைப் பாட்டோடு, பொருந்தி வருவன எவையோ அவையே உவமையாகும். வானத்தின் மதி அழகிற்கும், வனிதையரின் முக அழகிற்கும், உவமை கூறும்போது அதிலே சிறிதேனும் ஒருமைப்பாடு காண்கிறோம். தாரகையின் கண்சிமிட்டலுக்கும், தமிழ்பெண்ணின் புன்சிரிப்புக்கும்; வேலின் கூர்மைக்கும் பெண்கள் விழியின் பார்வைக்கும் தோகை; விரித்தாடுகின்ற மயிலுக்கும், தோகையின்றி ஆடுகின்ற தையலுக்கும் பொன்னுக்கும், பொன்மேனி படைத்திட்ட பூவைக்கும், கூறப்படும் உவமைகள், ஏறத்தாழ பொருந்தி வரக் காணலாம். ஆனால், பம்பாய் முதல்வர் கூறும் உவமையோ காதல் இலக்கியங்களை, விபச்சாரச் சாக்கடைகளுக்கும் இழிதகைமையானது.

ரோமியோவையும், ஜூலியட்டையும் பற்றிப் பேசும் அவர் அவர்களைப் பற்றிய வரலாறு படித்துத்தான் இருக்கவேண்டும். படித்து, அவர்களது காதல் வாழ்விலே, உள்ளன்புக்கும் உண்மைக் காதலுக்கும்தான் இடமளிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை தெரிந்திருந்தால் தெரிந்தும் அந்தக் 'காதல் வழிகாட்டிகளை' விபச்சார வழிகாட்டிகளோடு ஒப்பிட்டுக் கூறுவது என்றால், காதல் காவியங்களுக்கே பம்பாய் முதலமைச்சரின் கூற்று ஒரு களங்கத்தை உண்டாக்குவதாகும். காவியத்தைப் பழிப்பதாகும்.

ரோமியோவும் ஜூலியட்டும் அவளுக்கு அவனும், அவனுக்கு அவளுமாக இருந்தவர்களே தவிர, வேறு எவனுக்கும், எவளுக்கும், தங்கள் உள்ளத்திலே இடமளிக்காதவர்கள்.

தெருக்களிலே, நின்று கொண்டே ஆடவரோடு, வலிய சோரம் போகும், வழுக்கி விழுகின்ற வனிதையரும், அந்த வனிதையர் தரும், கணநேர இன்பத்தைப் பருகும் வெறியர்களும் ரோமியோவும், ஜூலியட்டுமாக, பம்பாயின் பிரதமருக்குக் காட்சி தருகிறார்கள். அவர் கருத்துப்படி பார்த்தால், காதலர்கள். விபச்சாரம் புரிபவர்கள்! விபச்சாரம் புரிவோர்: காதலர்கள்! விசித்திரமான,-பண்பாடுள்ள மக்கள் உள்ளம் புண்படத்தக்க விளக்கம்!! விபச்சாரத்திற்கு உதாரணம் காட்ட புராணக் குப்பைகளா இல்லை?

விபச்சாரம் கூடாது, என்பதிலே யாருக்கும், கருத்து வேறுபாடு இருக்க முடியாது, அதற்காக பம்பாய்ப் பிரதமரின்கூற்றை எவரும் ஒப்புக் கொள்ளவும் முடியாது. காதல் வேறு! விபச்சாரம் வேறு."

காதல்! கருத்து, ஒருமித்த ஆண் பெண், இருவருக்கே சொந்தம். 'இடைச் சொந்தம்' வேறு எதுவும் பாராட்டாதது காதல். விபச்சாரம்! மங்கையரை, மலராகவும், தன்னை வண்டாகவும் எண்ணி, மலர் விட்டு, மலர் தாவி, தேனைச் சுவைத்தல்!... தேசாய் புரிந்து கொள்ளட்டும்.

—பூவை-செங்குட்டுவன்.

## ஆசிரியத் தோழருக்கு..

# இலக்கியத் 'தென்ற'லிலா? இவர்களைப்பற்றியா?

மதுரை, 23—8—55.

அன்புடையீர்! வணக்கம்.

20-8-55 தேதியதென்றல்'வள்ளுவன் மூத்தோனை'யும், 'இலக்கியத்தில் காத'லையும் கொண்டு இன்பமயமாகத் தவழ்ந்து வந்தது. ஆனால், ஒரு பக்கம் மட்டும் எங்களை வேதனைப்படுத்தி விட்டது. வழக்கமாகவே கீழ்த்தரமாகப் பேசுகிற ஒருவரை நீங்கள் அவரளவுக்கு இறங்கி வந்து தாக்கியிருக்கிறீர்கள்.

நீங்கள் செய்ததோ-உதவியாளர் செய்ததோ, யார் செய்ததாயிருந்தாலும், தென்றலுக்கு அது தேவையே இல்லை என்பதே எங்கள் கருத்து. ''நமக்குக் கோபம் வர வேண்டும் என்பதற்காகத்தானே அவர்கள் அவ்வாறு பேசுகிறார்கள்? நாம் கோபம் கொண்டால், அது அவர்களுக்கு வெற்றியாகிவிடாதா?'' என்னும் அண்ணாவின் பொன்னுரைகளை மனதில் வையுங்கள். ''எதையும் தாங்கும் இதயமுண்டு நமக்கு''-தோழர் குருசாமியின் பேச்சு உங்களைப் போலவே எல்லோருக்கும் ஆத்திரத்தைக் கிளறியிருக்கும். இன்னும் அவருக்கும் கீழே இருக்கும் சில தி. க. தோழர்கள் பேசும் பேச்சுக்களைக் கேட்பீர்களானால் உங்களுக்கு எவ்வளவு கோபம் வருமோ தெரியவில்லை. எதற்கும், ''போற்றுபவர் போற்றட்டும்'' என்னும் முறைப்படியே தொடர்வதுதான் நம் முன் உள்ள கடமை. அவர்கள் சிறியவர்கள் என்று நாடு அறிய வேண்டுமானால், நாம் பெரியவர்களாக நடந்து காட்டும் வழிதான் பயன்படும். தங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. தலைவர்கள்மீது உங்களுக்குள்ள அன்புதான் அவ்வாறு பதில் தரத் தூண்டியது என்பதை நாங்கள் உணருகிறோம். ஆனாலும் இன்னும் பொறுப்போம்; பொறுத்துக்கொண்டே இருப்போம். காலம், பொறுத்தவர்களுக்கு அனுகூலமாக இருந்தே தீரும். ஆகவே, தயை செய்து இதுபோன்ற விஷயங்கள் இனித் தென்றலில் வேண்டாம்; வேண்டவே வேண்டாம்!

இன்னொன்று; தங்களை வம்புக்கும் வாதுக்கும் இழுத்து, தென்றலில் தமது பெயரைக்காண ஆசைப்பட்டுச் சில எதிர் உதிரிகள் எழுதுவதை நீங்கள் பொருட்படுத்தக் கூடாது. கல்லூரி வார்த்தையில் கூறுவதானால், அவர்கள் 'Below Notice' அதாவது, நாம் கவனிக்கத்தக்க திறைமையோ பெயரோ இல்லாதவர்கள். அதனை நீங்கள் பொருட்டாக்கமாட்டீர்கள் என்பது எங்கட்குத் தெரியும். ஆனாலும் முன்கூட்டியே தெரிவித்துக் கொள்கிறோம். காற்றிலே பறக்கும் சருகுகளை, காரிலே போவோர் கவனிக்க வேண்டியதில்லை. (கார், எனக் குறிப்பிட்டது, பொது மக்களுக்குத் தங்களிடம் உள்ள அன்பைத்தான்) அவர்கள் போட்டியிடுவதானால், கல்லக்குடி மாகாவியத்தைக் காட்டிலும் சிறப்பான காவியம் எழுதி, பொது மக்கள் முன்னிலையில் வைக்கட்டும். நமது கருத்துக்கு ஆதாரபூர்வமாகப் பதில் சொல்லட்டும். மிகவும் சாதாரணமானவர்களோடு மேடை யேற ஆத்திரம் வந்தபோதிலும் நாம் இணங்கக்கூடாது." சிவஞானம்கூட அத்தகு தகுதி உடையவர் அல்ல என்பதே எங்கள் கருத்து. நாட்டிலே சேர்ந்தாற்போல் நாலுபேர் அவரை மதிப்பதில்லை. கண்கூடாகக் காண்கிறோம். கல்லூரிகளுக்கு வந்து, புரியாமல் பேசி, அவமானப்பட்டுத் திரும்புகிறார். அவரை ஏன் நீங்கள் பெரிய மனிதனாக்குகிறீர்கள்? நிச்சயமாகச் சொல்கிறோம், தென்றலில் அவர் பெயர் வராமலிருக்குமானால், அவரைப் பற்றித் தெரிந்து கொள்பவர்களே இல்லை! தோழர்கள், தங்களை அன்புக்குரிய சகோதரராகக் கருதுகிறார்கள். பெரும் பயணத்திலும், ''அண்ணாத்துரை அறிஞரா?'' என்ற கவிதையிலும் நீங்கள் அண்ணாவைப்பற்றி எழுதியிருக்கும் வரிகளைப் படித்துப் படித்துப் பூரிக்கிறார்கள். **இது போன்ற கவிதைகளைத்தான் தங்களிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள்!**

''கம்பன் மட்டுமே எழுதக்கூடிய நடை'' என்று கம்பதாசர்கள் வீராப்புப் பேசிவந்த நடையில், கம்பனைக் காட்டிலும் தெளிவாக அழகாக எழுதப்பட்டு வெளிவருகிறது, **'கல்லக்குடி மாகாவியம்'**. ''நேசரைக் காணவிடத்துத்தான் நெஞ்சாரப் புகழவேண்டும்'' என்றாலும் நேரில் சொல்லாமல்-எழுதாமல்-முடியவில்லை. எங்கள் தமிழ்ப் பேராசிரியர்கள் ஆச்சரியமாக இதனை கவனிக்கிறார்கள். நம் தலைவர்களின் பெருமைக் குரிய தொண்டுகளை இப்படி காவியங்களாக்கி, சாஸ்வதமாக்கி வைக்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை.

'ராஜதண்டனை'யை நாங்கள் ரசிக்கிறோம்; சுவைக்கிறோம். அவையடக்கம் பாடுதல், காவிய முறை எனினும், வையம் தன்னை இகழுவதாக எண்ணியவர்கள்-கம்பனைத் தவிர-வேறில்லை. அதனைக் கம்பன் வாயாலேயே விளக்கியது மிகச் சிறப்பு.

'வள்ளுவன் மூத்தோன்'-மிகவும் அருமை. அதுவும் தொடரட்டும்.

சொற் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்களின் ''வாழ்வது எப்படியோ?'' நம்மைக் காட்டினும்; காங்கிரஸ்காரர்கள் அக்கறையோடு படிக்கவேண்டியதொன்று. நமது இயக்கத் தோழர்கள், அந்தக் கட்டுரைப்புள்ளி விபரங்களை ஆதாரம்காட்டித்தான் பேசுகிறார்கள். அதுபோல், எத்தனை வரிகள்-ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய்கள்-வடக்கே போகின்றன என்பதுபற்றியும், திரும்பித் தரப்படும் தொகைபற்றியும் விவரங்கள் வெளியிடப்படுமானால் மிகவும் உதவியாக இருக்கும்.

பன்மொழிப் புலவரின் ''சிலம்பு வழங்கும் செல்வம்'' இடையிலே அறுந்து விட்டது, வருத்தம் தருவதாகும். அது வருமா? வராதா? வருமானால் எப்பொழுது?

வெண்பாப் போட்டி, தென்றலுக்குத் தூணாகும். அடடா! நாட்டிலே எத்தனை கவிஞர்கள் இருக்கிறார்கள்! எவ்வளவு அருமையாக எழுதுகிறார்கள்! வாழ்க அவர்கள்!

பொதுவாக, தென்றலை நாங்கள் 'பைண்டு' செய்து வருகிறோம். **அதிலே சில்லறைகள் பற்றிய சமாச்சாரங்கள் வேண்டாம்; வேண்டவே வேண்டாம்!**

இங்ஙனம்,
**'தென்றல்' நேயர்கள்,**
வி. மாணிக்கம்
வே. வாசன்
ஆர். நித்தியமூர்த்தி
சரவணபாஸ்கரன்
பி.ஆர். சுந்தரேசன்
ஜெயலட்சுமி
ஆர், சரசுவதி
கே. அப்பாசாமி

[மற்றும் இருபத்து மூன்று தோழர்கள் கையொப்பம் இட்டுள்ளனர்.]


### மாணவர் வெளியீடுகள்

**குழந்தைக்குரல்** (அழ. வள்ளியப்பாவின் பாடல்கள்) **1--0--0**
**போலி இளவரசன்** (எகிப்தியக்கதை) **0--8--0**
**மந்திரக்கல்** (சீனத்துக்கதை) **0--8--0**
**சிப்பாய் முரளி** (தமிழகத்துக்கதை) **0--4--0**

விற்பனையாளர்களுக்கும், நூல் நிலையங்களுக்கும் கழிவு உண்டு.

### நூல் நிலையங்கட்கு

தமிழ் நாட்டில் இதுவரை வெளிவந்துள்ள மாணவர் வெளியீடுகள், குழந்தைப் புத்தகங்கள் அனைத்தும் ஒருங்கே கிடைக்கும் ஒரே ஒரு இடம்.

**மாணவர் இல்லம்**
ரங்கநாதம் செட்டி ரோடு,
**நுங்கம்பாக்கம், சென்னை-6.**


## அவர் பார்க்கிறார் !!!

அண்மையில் அகில உலக ஜோதியான பண்டித நேரு தென்னாடு வரப்போகிறார் என்பது நீங்கள் அறிந்ததே. தென் இந்தியா என்று அவர்கள் பெயரிட்டழைக்கும் திராவிடநாட்டில் அவர் பல்வேறு காட்சிகளை கண்டுகளிக்கப் போகிறாராம்.

தன்னுடைய நேர்மையான ஆட்சியில் திராவிடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பல தொழிற்சாலைகளை அவர் பார்க்கப் போவது இல்லையாம், பார்ப்பதற்கென்று காங்கிரஸ் ஆட்சி எந்த தொழிற்சாலையையாவது கட்டியிருந்தால்தானே பார்ப்பது.

ஆனால், அவர் தென்னாட்டிலே உலகப் பெரும் அதிசயமென்று ஒன்று இருக்கிறதாம். திருக்கழுக்குன்றம் என்ற இடத்தில் நாள்தோறும், கழுகு ஒன்று காலை பதினோறு மணிக்கு பறந்து வந்து பக்குவமாகத் தயாரித்த உணவை உண்ணும் காட்சியைப் பண்டிதர் பார்க்கப்போகிறாராம் இப்போதிருந்தே அங்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்.

கானகத்திலும், வானத்து வீதிகளிலும், சுற்றி யலைந்து வாழும் கழுகுகளுக்கு கிடைக்கும் உணவுகூட கிடைக்காது திராவிடத்து வீதிகளிலே ஏழைகள் ஏங்கி நிற்கும் காட்சியை அவர் காண்பாரா? அந்த ஏழைகளை உற்பத்தி செய்யும் காங்கிரசார் அக்காட்சியை பண்டிதருக்கு காட்டுவார்களா?


''குத்தீட்டி ஒருபுறத்தைக் குத்த வேண்டும்
கோடாரி ஓர் புறத்தைப் பிளக்க வேண்டும்''

அக்டோபர் முதல் தேதி எங்கும் கிடைக்கும்!

கொழுப்பெடுத்த பகைவரைத்தாக்கும் மாதம் இருமுறை.

# சண்டமாருதம்

ஆசிரியர் :
**கலைஞர் செல்லப்பாண்டியன்**

துணை ஆசிரியர்கள் :
கலைஞர் சுடலையாண்டி, F. C. F.
கவி கா. பா. சொள்ளமுத்து.

நிர்வாகி :
கவி சி. என். எஸ்.

**விலை ஒன்றரையணா. ஏஜண்டுகள் எழுதுக**

முன் பணம் கட்டுவோருக்கே இதழ் அனுப்பப்படும்.

**சண்டமாருதம்**
142. மவுண்ட் ரோடு:: சென்னை 6

## களம் 21

**காட்சி :** 21

**இடம் :** குலோத்துங்கன் தனி அறை.

**நேரம் :** காலை.

[அமராவதி, காலையிற் குளித்து, கருநாகப்பாம்பென கார் கூந்தற்பின்னலிட்டு, அம்பிகாபதியின் வரவை எதிர்நோக்கிய படி இருக்கிறாள். பாடங் கேட்கும் ஆசையும் ஆர்வமும் அவள் முகத்தில் பிரதிபலிக்கின்றன. ஐயவினாக்கள் எழுப்பி, பதில் காணும் ஆசையில், அடிக்கடி ஏதோ சிந்தித்தவளாய், கை விரலை ஆட்டி, தலையை அசைக்கிறாள். மெல்ல இசை அலைகளைப் பரப்புகிறாள்.]

**அம :** (பாட்டு)

அன்றே மலர்ந்தமலர் என்றாலும்-மணம்
அழியாத வண்ணமலர் தமிழாகும்!
குன்றாய் நிமிர்ந்துநிற்கும் குறளோடும்-வளங்
குறையாத நற்சிலம்பின் ஒலியோடும் (அன்)

சைகையில் பலநாடும் தடுமாறியே-சொல
தமக்கென்று மொழியின்றி வாழ்நாளிலே
வைகையில் காவிரியில் தமிழ்பாடியே-பொன்
வாணிபம் செய்தார்எம் மூதாதையே! (அன்)

[தூரத்தில் மல்லிகை வருவது தெரிந்து, பாட்டை நிறுத்துகிறாள் அமராவதி. மல்லிகை, அவளருகில் வருகிறாள்]

**மல் :** பாட்டை நிறுத்திவிட்டாயே! பாடு அமராவதி!

**அம :** முடியாது!

**மல் :** ஏன்?

**அம :** பாடச் சொன்னபோதெல்லாம் பாடிக்கொண்டிருப்பதற்கு, நான் கம்பரல்ல! தெரியும்மா? அந்த உணர்ச்சியிலே நான் அம்பிகாபதி பரம்பரை!

**மல் :** (முகவாய்க்கட்டையில் கைவைத்து) அடிசக்கை! பாடமே இன்றுதான் ஆரம்பம்-அதற்குள் குருவை மிஞ்சிய மாணவியாகி விட்டாயே!

**அம :** இல்லாமலா! மல்லிகா! தானாகப் பாடும் குயில்-கட்டுப்படாதே என்று எச்சரிக்கும் கவிஞன்!-செங்கல் அடுக்குவதுபோல் அடுக்குவது பாட்டாகாது! உணர்ச்சி வசப்பட்டு வருவதே பாட்டு!

**அம்பி :** (வந்தபடி) சரியான வார்த்தை!

[இந்தக் குரல் கேட்டு அமராவதியும் மல்லிகாவும் எழுந்து நிற்கிறார்கள். அமராவதி அம்பிகாபதியை வணங்குகிறாள்.]

**அம்பி :** மாணவியின் உணர்ச்சி முழுவதும் புரிகிறது! இத்த உணர்வு எல்லோருக்கும் வந்துவிட்டால், நன்றாயிருக்கும்,

[இருவரும் எதிர் எதிரே அமர்தல். மல்லிகை தூரத்தில் சென்று நிற்கிறாள்.]

**அம :** ஐயா! தங்களிடம் முதலிலேயே சில ஐய வினாக்களை எழுப்ப விரும்புகிறேன்.

**அம்பி :** தாராளமாக! கிளிப்பிள்ளைபோல், பாடங் கேட்பதைக் காட்டிலும் ஐய வினாவுக்குப் பதில் காண முயல்வது உன்னதமான படிப்பு! கேளுங்கள்; தெரிந்தவரை சொல்கிறேன்.

**அம :** அரசவையில் வடமொழி மரபு வேறு; தென்மொழி மரபு வேறு என்றீர்களே - கொஞ்சம் விளக்கமாகச் சொல்லமுடியுமா?

**அம்பி :** சுருக்கமாகவே சொல்லிவிட முடியும். வடமொழி மரபு-பாஞ்சாலி; தென்மொழி மரபு-கண்ணகி.

**அம :** (மெல்லச் சிரித்து) சரிதான்...உம்...ஆனாலும் ஒன்று. குறிப்பிட்ட ஒரு உதாரணமே, ஒரு மொழியின் மரபுக்கு விளக்கமாகிவிட முடியுமா?

**அம்பி :** முடியும்! ஒரு மொழியாளரின் மரபுக்கு ஒத்தவைதான் அந்த மொழி இலக்கியங்களில் முக்கியத்துவம் பெற முடியும். தென்மொழி இலக்கியத்தில் நாம் காணும் கண்ணகி, சீரிய பண்பாடும் ஒழுக்கமும் கொண்டவள்; அதே போது, கணிகை என்ற விளக்கத்தோடு படைக்கப் பெற்ற ஒரு காவியப் பாத்திரமும் நெறி தவறாதிருப்பதைக் காண்கிறோம்-கணிகை ஒருத்தி ஒருவனிடமே உள்ளத்தாலும் வாக்காலும், உடலாலும் உறவுகொண்டாள் என்கிறது தென்மொழி இலக்கியம். குடும்பப்பெண் ஒருத்தி ஐவருக்கும் பங்காளாள்-அவளும் பத்தினி என்று சாதிக்கிறது வடமொழி இலக்கியம். ஒரு கொள்கையின் மீதுள்ள நம்பிக்கையும் இலக்கிய மரபுக்குக் காரணமாகி விடுகிறது! அப்படிப் பார்த்தால், தென்னவர் நம்பிக்கை, ஒன்றையே பற்றி ஒன்றுடன் வாழ்தல் உயர் தனிக்கற்பு என்பது. மணம் என்கிற பெயரில் ஒன்றுக்கு மேற்பட்டோரை மணந்தாலும் அதுவும் கற்புத்தான் என்பது வடமொழியாளர் நம்பிக்கை.

**அம :** அப்படிச் சொன்னால்...வடமொழி இலக்கியத்தில் சகுந்தலை இல்லையா?

**அம்பி :** இருக்கிறாள்-ஆனால், படைப்பிலே பாஞ்சாலி பெற்ற தனி இடத்தை அவள் பெறவில்லையே!

**அம :** உண்மைதான்...உம்...இன்னொன்று. தோன்றிய காலம் தெரியாத மொழி, உலகில் தமிழ் ஒன்றுதானா?

**அம்பி :** இல்லை வடமொழியும் அவ்வாறே! ஆயினும் இரண்டிலும் தமிழ் மூத்ததே எனக் கருதப்படுகிறது.

**அம :** அப்படியென்றால் வடமொழி...

**அம்பி :** தமிழுக்குப் பலம் பொருந்திய பகைவன்!

**அம :** தமிழ் வழக்குச் சொற்கள் பலவற்றிற்கு வடமொழிச் சொற்களே வேர் என்று கருதப்படுகிறதே...

**அம்பி :** தவறு. பலவற்றில், அதற்கு இது வேரா, இதற்கு அது வேரா என்பது ஆராய முடியாது.

**அம :** காலத்தால் முந்திய வடமொழி இலக்கியத்தில் காணப்படும் சொல், தமிழில் காணப்படுமானால்?

**அம்பி :** அந்த வடமொழி இலக்கியத்திற்குச் சமகாலத் தமிழ் இலக்கியத்தை ஆராயவேண்டும்.

**அம :** அப்படி ஒரு இலக்கியம் இல்லையென்றால்...

**அம்பி :** காலத்தீ அதைக் கருக்கி அழித்திருக்கும் என்று கருத வேண்டும்.

**அம :** இது உங்களுக்குத் தாய்மொழியின் பாலுள்ள அன்பை வெளிப்படுத்துகிறதே தவிர, சரியான சமாதானமாகத் தோன்றவில்லை.

**அம்பி :** கேளுங்கள். குறளிலே காணப்படும் சொற்களில் விரல் விட்டு எண்ணத்தக்க சில சொற்களே, வடமொழிச் சொற்களோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. வடமொழி, தெற்கே பரவியபின் சுமார் அறுனூறு ஆண்டுகள் பிற்பட்டு எழுந்தது குறள் என்று கருதப்படுகிறது. ஆகவே, குறட் சொல்லுக்கு மூலம் வடமொழி என்று கருதத் தோன்றும். ஆனால், குறட்பாவின் பக்குவத்தைக் காணப்போனால், அதற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே நல்ல இலக்கியங்கள் தமிழில் தோன்றியிருக்க வேண்டும் என்பது காணப்படும். அந்த இலக்கியச் சொற்களே வடமொழிக்கும் தாவி, குறளுக்கும் தாவியிருக்கலாம். அந்தப் பழைய இலக்கியங்கள் மறைந்துபோன பலவற்றில் சிலவாக இருக்கலாம்.

**அம :** இப்படியெல்லாம்...யூகிக்கிறீர்கள்...இல்லையா?

**அம்பி :** ஆம்; யூகந்தான்—முடிவல்ல!

**அம :** சரி, இயற்கைக்கு அப்பாற்பட்ட சில சொற்கள் குறளில் காணப்படுகிறதே...அவை...?

**அம்பி :** சரியான கேள்விதான். வடமொழிப் பண்பின் கலப்பினால் வந்த சில தமிழ் வார்த்தைகளும், ஒருசில 'வடமொழித் திரிபு'களும்தான் அவை.

**கண்ணதாசன்**

அம : ஒப்புக்கொள்கிறீர்களல்லவா! போதும்! ஆக, வட மொழிச் சொற்கள் சிலவும் கலந்துள்ளன...

அம்பி : ஆம்!...நான் முழுதும் மறுக்கவில்லையே! 'பல சொற்களுக்கு' என்பதைத்தான் மறுக்கிறேன். சில சொற்களுக்கு வடமொழிப் பண்பும், வடமொழி வார்த்தைகளும் வேர் என்பதை ஒப்புக்கொள்கிறேன். பண்புக்கே விரோதமானது எப்படித் தமிழ்ச் சொல்லாக இருக்க முடியும்!

அம : நல்லது...உம்...எனக்கு, கவிதை எழுதும் முறையைக் கற்றுத்தர வேண்டும்.

அம்பி : தருகிறேன். நாளைமுதல், நான் எழுதிவரும் கோவையைத் தினமும் படித்துக் காட்டுகிறேன். கவனித்துக் கேளுங்கள், ஓசை முறையை முதலில் புரிந்துகொண்டீர்களானால், இலக்கண அமைப்பை விளங்கிக்கொள்ள ஒத்தாசையாக இருக்கும்.

அம : சரி...

அம்பி : நான் புறப்படட்டுமா?

அம : அதற்குள்ளாகவா!...உம்...இப்பொழுது நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்...கம்பரோடு...வீட்டில் தானே?

அம்பி : இல்லை. சத்திரத்தில்.

அம : (திடுக்கிட்டு) ஆ!

அம்பி : ஏன் திகைக்கிறீர்கள்! வீட்டிலிருக்கிற கம்பரைக் காட்டிலும் சத்திரத்துக் காவலர்கள் உணர்ச்சியுள்ளவர்கள்! என்னை மதிக்கிறார்கள். அன்பு செலுத்துகிறார்கள்.

அம : ஆனாலும் அரியாசனத்தில் அரசரோடு சரியாசனம் இருக்க வேண்டிய நீங்கள் சத்திரத்தில் தங்கியிருப்பதை நான் விரும்பவில்லை.

அம்பி : ஏகம்பவாணர் அழைத்தார். அதற்கும் நான் மறுத்து விட்டேன். எனக்கு சத்திரமே சங்கீத மண்டபம்--தமிழ் வாழும் மாளிகை!

அம : இல்லை. கலைமண்டபத்தை உங்களுக்கென ஒதுக்கிவிட நான் ஆசைப்படுகிறேன்.

அம்பி : இப்பொழுது வேண்டாம். அன்பு சிந்தும் காவலர்கள் என்னைப் பிரியவிடமாட்டார்கள். கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்.

[என்று எழ முயல]

அம : கடைசியாக ஒன்று...

அம்பி : என்ன!

அம : நீங்கள் நன்றாகப் பாடுவீர்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன்...

[இப்பொழுது மல்லிகை அவசரமாக வந்து]

மல் : பார்த்தாயா! "பாடச் சொன்னால் பாடுவது தவறு! தானாகப் பாடவேண்டும்" என்று நீ தானே சொன்னாய்!

அம்பி : அப்படிச் சொல்!

அம : நான் சொன்னது கவிதை கட்டுவதைப்பற்றி--கட்டப் பட்டதைப் பாடுவதைபற்றியல்ல!

அம்பி : (சிரித்து) சுலபமாக மாற்றிக்கொண்டு விட்டீர்கள்! தமிழ்--எதற்கும் பொருள் தருகிறது!

அம : (செல்லமாக) பாடுங்கள்...

அம்பி : (பாடுதல்)

பாடமாட்டேன்! நான் பாடமாட்டேன்! தமிழ்ப்
பாவலர் செய்த தமிழ்ப் பாட்டன்றி வேறெதையும் (பாட)

ஆடும் மலரின் அசைவில் பிறந்து
அழியா அழகுக் கடலாய் மலர்ந்து
பாடும் இயற்கையெனும் பாவை இதழ் திறந்து
பாடு பாடென்று எனை நாடிவந்தாலன்றி நான் (பாட)

காலில் சிலம்பும் இடைமணிமேகலை
கவியின் அழகும் சூடிடும் சேயிழை
சேல்விழி நாடகம் ஆடிடும் வேளை
சிந்தையில் அலைபாயும் எண்ணங்கள் உருவாகி
பொங்கும் புதுமை கலந்து-இனிமை நிறைந்து
உலகெங்கும்-அமுது வழங்கும் அதனில் மயங்கும்,
கலைகள் விளங்கும்!
பேரின்பந் தங்கும் செந்தமிழ்
வண்ணம் மின்னும் நெஞ்சினில்
பழகு தமிழிசை அஞ்சும்
பாவ நய சுகம் இல்லா—இசை வேறெதையும் (பாட)

[பாட்டு ஆரம்பமானதும் மெது மெதுவாக எழுந்து ஆடத் துவங்குகிறாள் அமராவதி. "அமராவதி!" என்று சத்தம் கேட்கிறது. பாட்டும்-ஆட்டமும் நிற்றல். குலோத்துங்கன் பதட்டத்தோடு வருகிறான்.]

(தொடரும்)

# நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்த காலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன் காணும்
மாறுத கனவுலகம் காட்சி யாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத் தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

பல கவிஞர்களின் குரலையும் ஆராய்ச்சி நடத்துவது, பொழுது போக்கும் சுவையும்நிறைந்த நல்ல வேலை. எல்லோருமே அதைநடத்தி விட முடியாது. கவிதைகளில் ஆழப் பதிந்த மனத்துக்குத்தான் ஆராய்ச்சித் துணிவு வரும். "தோழர் வி. ஆர். எம். செட்டியார்' கவிக் காட்டில் மூழ்கித் திளைப்பவர். ஆள் உயரம் பார்க்காமல், கவிதை ஆழம் பார்த்து ரசிப்பவர். பெருங் கவிகள் முதல் இளங் கவிகள் வரை அனைவரது கவிதைகளையும் படிப்பவர். படித்து,அணு அணுவாக ரசிப்பவர்; ரசித்ததைத் தெளிவாகச் சொல்லிடும் வல்லமை உள்ளவர்." என்று நமக்குச் சொல்லாமற் சொல்லுகிறது, அவரது 'கவிஞன் குரல்' என்னும் நூல். ஷெல்லி, லீஹண்ட், தாகூர், கம்பன், கீட்ஸ், எமர்சன், ஆஸ்கார் ஒயில்ட், ஷேக்ஸ்பியர், வோர்ட்ஸ்வொர்த், பாரதி தாசன், பெர்னுட்ஷா, முடியரசன், சாமி பழனியப்பன் ஆகிய யாவரும் இந்த நூலின் கண் வந்துள்ளனர். பிரதியொரு கவிஞரின் சிறந்த படைப்பும் இதில் சுட்டிக் காட்டப் பெறுகிறது. கருத்து வேற்றுமைகளுக்கு விதிவிலக்களித்துப் படிக்க வேண்டிய சில பகுதிகள் இதில் காணப்படுகின்றன. புரட்சிக் கவிஞரைப் பற்றி, ஆசிரியர் இதில் எழுதியுள்ள கருத்து, 'கவிஞருக்கும் கவிஞர்' என்ற தலைப்பில் பிரிதோரிடத்தில் தரப்பட்டுள்ளது. இந்தநூலைப் படிப்பவர்களுக்கு நிறையக் கவிதை படிக்கும் ஆசை எழும். அதற்காகவே அனைவரும் இதைப் படிக்க வேண்டும்.

—கவிஞன் குரல்—ஆசிரியர். வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.; கிடைக்குமிடம் :ஸ்டார் பப்ளிகேஷன்ஸ், 5-புதுச் சந்தைத் தெரு, காரைக்குடி—விலை ரூ. 2—8—0.

◉

கவிஞர் சாமி பழனியப்பனின் கவிதைத் தொகுப்பு 'புகழ்க்கன்னி' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. பொருளும் எளியையும் நிறைந்த பல கவிதை, 'முருகன் என் ஆசான் என்ற தலைப்பில் உள்ளது. இந்தக் கவிதை கண்டு, சிலர் முருக பக்தரோ என மயங்குவாருமுண்டு. ஆனால், இவர் கூறும் முருகன், இயற்கை யென்னும் அழகன் என்பது யாவரும் அறிய வேண்டிய ஒன்றாகும்.

இவர் எந்தக் கவிஞரும் செய்யாத ஒரு வேலையைச் செய்ய முற்படுகிறார். எந்தக்கவிஞரும் கொதித்தெழும் கடலை-ஏதேனும் ஒரு கருப்பொருளுக்கு உவமிப்பார்கள். ஆனால் இவரோ அந்தக் கடலை அமைதிப்படுத்த முயல்கிறார்! இந்தத் துணிச்சல், கவி உள்ளம் கொண்டாருக்கன்றி மற்றோருக்கு வராது.

கடலை அமைதிப்படுத்திய கையோடு கையாய், தன் இதயத்தைத் தூக்கி வெளியில் எறிந்து பறந்துபோகச் சொல்கிறார். "இந்த நாட்டு மக்கள் நன்றிகெட்டவர்கள்! கொதிக்கின்ற உள்ளமே! உனக்கு இங்கே குடியிருப்புக்கு இடமில்லை! பறந்துபோ!" என்கிறார்.

உலகில் சிலர் சாகாமலிருப்பது பற்றி இவர் சஞ்சலப்படுகிறார்! கவிதையைப் பார்க்கும்போது, நியாயமாக அவர்கள் சாக வேண்டியவர்கள்தான் என்கிற எண்ணம் நம்மிடைப் புகுந்து கொள்கிறது. நல்ல நல்ல கவிதைகள்! வாழ்த்துக்குரிய கவிஞர், சாமி. பழனியப்பன்.

—புகழ்க்கன்னி—ஆசிரியர்: சாமி பழனியப்பன் - கிடைக்குமிடம். வீனஸ் பப்ளிகேஷன்ஸ், அரியக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்—விலை ரூ. 1—8—0

◉

சென்னை நகரின் வரலாற்றையும் பெருமையையும், அரசியலிலே அது பெற்ற ஸ்தானத்தையும், வாணிபத்தையும், நீதி முறையையும் முழுக்க முழுக்கத் தாங்கி ஒரு நூல் வெளிவந்துள்ளது. சென்னை நகரின் பூகோளப்படம் ஒன்றும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. சென்னையின் முக்கியப் பகுதிகள் புகைப்படங்களாக நின்று இதனை அலங்கரிக்கின்றன. அழகு தவழ்கிறது மேலட்டை. இதனைப் படித்தால் தான் சென்னையின் வரலாற்றை முழுதும் தெரிந்து கொண்டதாக அர்த்தம். சனத் தொகைக் குறிப்பும் காணப்படுகிறது. காலமுறை அமைப்பு ஒழுங்காக இருக்கிறது. பின்னதை முன்னதாகவும் முன்னதைப் பின்னதாகவும் போட்டுக் குழப்பாமல் முறையாக வரைந்துள்ளார், ஆசிரியர்.

—சென்னை மாநகர் — ஆசிரியர்- மா. சு. சம்பந்தன்—கிடைக்குமிடம் : பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை -- விலை ரூ. 2—0—0.

◉

—கண்ணதாசன்.

# ஆராய்ச்சிக் கூடமா ? ஆரியப் பாசறையா ?

— சிவம் —

சென்னைப் பல்கலைக்கழகம் என்ற பெயரை உச்சரிக்கும் தமிழ் மகன் ஒவ்வொருவரதுஉள்ளமும்,மகிழ்ச்சியினாலும், பெருமிதத்தினாலும் நிறைந்து நிற்கும் என்பது நாம் சொல்லாமலேவிளங்கும். திராவிடத்திற்குப் பெருமையைத் தேடித் தந்த புலவர்கள், அரசியல் வானிலே சிறகடித்துப் பறக்கும் அறிஞர் பெருமக்கள், உலக நாடுகள் பார்த்து வியக்கும் விஞ்ஞான மேதைகள், ஆங்கிலேயன் கேட்டுப் பெருமூச்செறியும் சொற்பொழிவாளர்கள், இப்படிப்பட்ட பெருமக்கள் பலரை தயார் செய்து கொடுத்த பெருமை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு உரியது. கல்வித்துறைபற்றிப் பேசப்படும் அரங்குகள், கல்வித்துறை பற்றி எழுதப்படும் புத்தகங்கள் இவைகளிலெல்லாம், சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயர் இருப்பதை நாம் பார்க்கலாம்.

இத்தகு பெருமைவாய்ந்த ஒரு அமைப்பில் சென்ற சிலநாட்களுக்கு முன், அந்தப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் கண்டு மனம் நோகும் செயல் ஒன்று நடைபெற்று விட்டது. படித்துப் பட்டம்பெற்றவர்கள் மட்டுமல்ல, சென்னைப் பல்கலைக் கழகத்தின் மீது மதிப்பு வைத்திருப்போர் அனைவரும் வேதனைப்படும் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்று விட்டது.

ஆண்டுதோறும் படித்து பட்டம் பெறும் தோழர்களுக்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கல்வித்துறை நிபுணர்களை அழைத்துப் பேசச் சொல்வது தொன்றுதொட்டு நடைபெறும் செயலாகும். அந்த விழாவில் சொற்பொழிவாற்ற திறமைசாலிகளைத்தான் அழைப்பது வழக்கம். அப்படி அழைக்கப் படுவோர் அடக்கத்துடன் தனக்குத் தெரிந்ததைச் சொல்லிப் போவார்கள்.

இந்த ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்புவிழாவில் பேச, தோழர் ஆர். வி. கிருஷ்ணய்யர் என்பவர் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு அங்கே சொற்பொழிவாற்றத் திறமையிருக்கிறதா இல்லையா என்பது பற்றியல்ல நாம் இங்கே எழுதுவது; பட்டதாரிகளிடையே பேச அழைக்கப்பட்ட அவர் பேச்சிலே காணப்பட்ட விஷமத்தைப்பற்றித்தான் நாம் இங்கே குறிப்பிடுவது அவருடைய பேச்சு முழுமையும் ஒரே வேதாந்தவிளக்கமாக இருக்கிறது. அதுபற்றி நாம் கவலைப்படவில்லை; அது அவசியமும் இல்லை.

ஆனால் அங்கே அவர் இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றிப் பேசியிருக்கிறார். பார்ப்பனர்களுக்கு இந்த நாட்டில் கல்விச் சலுகை அளிக்கப்படவில்லை என்று மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் திராவிடர் இயக்கத்தை தாக்கிப் பேச பல்கலைக்கழக மேடையை தோழர் ஆர். வி. கிருஷ்ணய்யர் பயன்படுத்தியிருக்கிறார் எனலாம்.

பிற்பட்ட வகுப்பினர் உயர்வு என்று சொல்லிக் கொண்டு மேல் படிப்புக்குத் தகுதியான மக்களைப் புறக்கணிப்பது கூடாது என்று அவர் பேசியிருக்கிறார். பட்டம் பெற்ற இளைஞர்களுக்குப் பயன் தரும் உரையா இது?

அவரது பேச்சில் காணப்படும் மற்றொரு செய்தி "இந்தியாவின் சரித்திரத்தில் தென்னாடு தன்னை என்றுமே தனி நாடாகக் கருதியதில்லை" என்பதாகும். திராவிட நாடு தனியாகப் பிரிவது கூடாது என்பதற்கு அவர் இப்படி சுற்றி வளைத்து பேசியிருக்கிறார். இந்தியாவின் சரித்திரம் எப்படிப்பட்டது என்பதை அறிந்தோர் யாரும், இந்த முன்னாள் சட்ட சபைக் காரியதரிசியின் சொல்லை நம்பமாட்டார்கள். இவர் என்ன! யார் யாரோ எப்படி யெப்படியோ நம்மைத் தாக்கிப் பார்க்கிறார்கள். திராவிடர் இயக்கம் அழிந்து போகவில்லை. ஆகவே நாம் இந்தப் பேச்சினால் பாதிக்கப் படப்போவதில்லை.

நாம் கேட்க விரும்புவதெல்லாம் சென்னைப் பல்கலைகழக மேடையில் இந்த அரசியல் பிரச்சாரம் ஏன், எப்படி அனுமதிக்கப்பட்டது, என்பதுதான்! நல்லவர்களின் மதிப்பைப் பெற்றுள்ள பல்கலைக்கழகம் ஏன் இப்படி நச்சுப் பிரசாரத்தையும் பொய்ப் பிரச்சாரத்தையும் அனுமதிக்க வேண்டும்.

பட்டமளிப்பு விழாவில் பேச புலவர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை அழைத்துப் பேசச் சொல்லலாம் என்ற உயர்ந்த எண்ணம் பல்கலைக் கழகத்தினிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு விட்டதா!

கலைஞர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆகியோர் சொற்பொழிவாற்றி படித்துப் பட்டம் பெற்றும் மாணவர்களின் உள்ளத்திலே புத்துணர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய இடம் பல்கலைக் கழக மேடை. அங்கே அரசியல் பிரச்சாரம் நடைபெற அனுமதிப்பதா? நாட்டுமக்கள் நிரம்பிய மேடையில் தோன்றி உறுதியான உள்ளத்துடன் பேசி மக்களின் உள்ளத்திலே பதிந்துவிட்டிருக்கும் கொள்கைகளை எதிர்த்து நேரடியாகப் பேச முடியாத பலருக்கு சென்னைப் பல்கலைக்கழகம் இடம் அளிக்காமல் இருக்குமாக!

பிற்பட்ட வகுப்பினருக்கு கல்வி அளிப்பதா, உயர்ந்த ஜாதியினர் எனப்படுவோருக்கு கல்விச் சலுகைகளைக் குறைப்பதா என்பது பற்றிய பிரச்சினைகளை ஆராய வேண்டிய இடம் சென்னை சர்க்கார் காரியாலயம், பல்கலைக்கழக மேடையல்ல என்பதை சென்னைப் பல்கலைக் கழகத்தை நடத்திச் செல்வோர் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

நாட்டுக்குத் தேவையான நம் மக்களைத் தயார்செய்யும்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைப்பு ஆரியர்களின் பாசறையாக மாற வேண்டாம். ஆராய்ச்சிக் கூடம் அது. அங்கே சமுதாயத்தைக் கெடுத்தோரின் மரணகீதம் கேட்க வேண்டாம். ஆரம்பத்தில் திருக்குறளை மேற்கோள் காட்டிப் பின்னர், திராவிடரின் தன் மானத்தைப் பழிக்கும் சொற்பொழிவுகள் நடைபெறுவது நாட்டுக்கு உகந்த செயல் அல்ல, பல் கழகத்திற்கும் பெருமை தரும் செயல் அல்ல.

## சாகாதே ! செத்துவிடுவேன் !...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குப் பிடிபடவில்லையே தவிர, நீ வந்திருந்ததை- காத்திருந்ததை நீ சூடியிருந்த மலர் வாடை அறிவித்தது. மலர்வாடை தெரிந்தும் என் மனதைச் சோதிக்கலாமா என்கிறாயா? அந்த இரவு நேரத்தில் உன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரர் தன் வீட்டுப் பசுவைக் காணவில்லை என்று தேடிவந்தார், கைவிளக்குடன். என்னுடைய அஞ்சுமனம், பசுவைக் காணவில்லை என்பது உன்னைத் தேடி வருவதற்கு தமிழகம் சொல்லும் மறைபொருளோ என்று எண்ணித் திரும்பிவிட்டேன். இதுதான் கோளாறு- வேறல்ல! ஆனால் உன்னை நான் அன்று பார்க்க வந்தது, உனக்கு இருட்டிலே மாலை சூட்டி, நீ எனக்குத்தான் சொந்தம் என்றும் பதிவு செய்து கொண்டு வந்து விட அல்ல! என்னை மறந்துவிடுவேன் என்று நேரிடையாகச் சொல்லுவதற்காகவும், என்னுடைய பரிபூரண அன்பு உனக்குக் கிடைக்குமே தவிர, நீ எனக்கு உரிமைப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகவும்தான் ! உனக்குப் பணம் தேவை என்றால், பணம் தருவேன்; துன்பம் என்றால் தேடி வந்து பார்ப்பேன். ஆனால் தூண்டுகோல் இல்லாத விளக்கு போல் உன் வாழ்வு அணையப்போகிறது என்று நீ எழுதியிருக்கிறாயல்லவா! அது போல நீயாகவே உன்வாழ்வை அணைத்துக்கொள்ள முனைந்தாலும் 'சாகாதே செல்வமே! செத்துவிடுவேன்! என்று சொல்ல பழைய நிலையில் இல்லையே! என் மனம் "சாகாதே! உனக்குக் கிடைக்காத அத்தானை பார்த்துக்கொண்டிருக்கவாவது நீ வாழக்கூடாதா? செத்து விட்டால் நீ நினைக்கும் அத்தான் கிடைத்து விடப்போகிறானா?" என்று புதிய தத்துவம் கூறி உன் சாவைத் தடுக்க முயலுவேன். இது மனித குணம்- அந்த முயற்சியின் முதல் படிதான் இந்தக் கடிதம். வாய்ப்பும், வசதியும் கிடைத்தால் சந்திப்போம்- பேசுவோம். அதோ ஊர்வலம்! தாய்த்திருநாட்டு விடுதலைப் படையின் படையிய முழக்கம் கேட்கிறது. நான் போகிறேன்.

அன்பு
அத்தான்

### ஒரு திருத்தம்

12-ம் பக்கத்தில் வள்ளுவன் மூத்தோன் பகுதியில் ஐந்தாவது பாரா இரண்டாவது வரியில் 'நிலை பெற்றுணர்வு நீங்கிய' என்றிருக்கிறது. அது 'நிலை பெருந்துணர்வு நீங்கிய' என்றிருக்கவேண்டும். திருத்திக் கொள்க.

## நம் மேடை

### தென்னாற்காடு மாவட்டத்தில் அண்ணா

28-8-55 ஞாயிறு காலை - 9-மணி, கடலூர் "நியூ சினிமா"வில் சிறப்புக் கூட்டம் நன்கொடை. அணா. 8. 4
பகல் 12. புகழேந்தி இல்லத்தில் விருந்து.
பகல். 2. மாவட்டக்குழுக் கூட்டம்
மாலை. 3. நெல்லிக்குப்பம், "ஊராட்சி மன்ற" வரவேற்பு.
மாலை, 6. பொதுக் கூட்டம்.
29-8-55 காலை 10. உளுந்தூர் பேட்டை தோழர் சண்முகத்தின் செல்விக்கு பெயர் சூட்டல்
மாலை. 4. தியாகதுருவம் பொதுக் கூட்டம்.
இரவு. விழுப்புரம் பொதுக்கூட்டம்
30-8-55 மாலை 6. சிதம்பரம் பொதுக் கூட்டம்.
இரவு. "பரப்பிரம்மம்" நாடகத் தலைமை.
31-8-55 மாலை. 6. திட்டக்குடிப் பொதுக் கூட்டம்.

### தஞ்சை

28—8—55
பேசுபவர்
க. அன்பழகன்

### மாயவரம்

28--8--55
கண்ணதாசன்.

### பெங்களூர்

28--8--55
(பகுத்தறிவு மன்றம்)
எஸ். வி. பதி,
ப. செல்வராசன்,
வீ. முத்து, கிருட்டிணன்,
ராமசாமி.

### குன்னத்தூர்

1--9--55
எஸ். எஸ். தென்னரசு,
வீ. சண்முகநாதன்.

### கோபிசெட்டிபாளையம்

2—9—55
எஸ். எஸ். தென்னரசு.

### பாளைவாயில்

3—9—55
கண்ணதாசன்

### தாம்பரம்

4—9—55
கண்ணதாசன்.

(8)

பஞ்சாலைகள் வடக்கே எந்த அளவுக்குப் பெருகி வளம் பெற்று, வட நாட்டு முதலாளிகளுக்குக் கொழுத்த இலாபத்தையும், வட நாட்டு மக்களில் பல இலட்சம் பேர்களுக்கு நல்ல வருவாய் உள்ள வாழ்வையும் அளித்துள்ளன என்பதோடு மற்றொரு உண்மையும் நம் உள்ளத்தில் வேதனையைத் தூண்டுகிறது. இழைக்கப்பட்டிருக்கும் அநீதியின் அளவையும் விளக்குகிறது.

மூலப் பொருளான பருத்தியை அதிக அளவில் உற்பத்தி செய்வது திராவிடம். ஐரோப்பிய இயந்திரங்களையும், டில்லி ஆட்சியின் ஆதரவையும் கொண்டு ஆலைகளைப் பெருக்கிக்கொண்டு வாழ்பவர்கள் வடவர்கள்.

கீழ்க்காணும் விபரங்களை ஊன்றி ஆராய்ந்தால் இந்த உண்மை நன்கு புலப்படும்.

| | பருத்தி விளையும் நிலத்தின் பரப்பளவு [ஏக்கர்கள் ஆயிரங்கள்.] | உற்பத்தியாகும் பஞ்சு பேல்கள் (392 பவுண்டு பேல்) ஆயிரங்கள். | நெய்யப்படும் துணி கெஜங்கள் 10 லட்சங்கள். |
|---|---|---|---|
| திராவிடம் | 1778 | 638 | 246·6 |
| வடநாடு | 7250·2 | 1203 | 3446 |
| விகிதம் [Ratio] | 1 : 4·07 | 1 : 1·88 | 1 : 14·05 |

பருத்திப் பயிராகும் நிலப்பரப்பு தென்னாட்டைக் காட்டிலும் வட நாட்டில் நான்கு மடங்குக்கு மேல் (1 : 4·07) இருக்கிறது. உற்பத்தியாகும் பஞ்சும் அதே விகிதப்படி அமையவேண்டும். ஆனால் உற்பத்தியாகும் பஞ்சின் அளவு நம்முடையதைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கும் குறைவாகவே (1 : 1·88) உள்ளது. அதாவது பஞ்சு உற்பத்தித் தரம் நமது தரத்திற்குப் பாதிகூடத் தேறவில்லை, ஆனால் நெய்யும் துணி அளவு மட்டும், நம்மைவிட 14 மடங்கு (1 : 14·05) உயர்ந்து உள்ளது. இந்த விபரங்கள் என்ன கூறுகின்றன தெரியுமா?

"தென்னாடு விவசாய நாடு. வடநாடு தொழில்வளமிக்க நாடு" என்னும் அரிய உண்மையைக் கூறுகின்றன.

★

பருத்தி நூல், ஆடை உற்பத்திக் கடுத்து வருவது சணல் கயிறு, பைகள் உற்பத்தியாகும். சணல் **(Jute)** பயிராவதும் வடக்கே. சணல் ஆலைகளும் மிகப் பெரும் பகுதி வடக்கேதான் அமைந்துள்ளன. மொத்தம் 113 சணல் ஆலைகள் ஏறத்தாழ 70 கோடி ரூபாய் மூலதனத்தில் நடைபெற்று வருகின்றன. 113 ஆலைகளில் நான்கே நான்கு சிறு ஆலைகள் தாம் தென்னாட்டில் உள்ளன.

பாகிஸ்தான் பிரிவினை, சணல் ஆலைகளைப் பெரிதும் பாதித்துவிட்டன. காரணம் சணல் உற்பத்தியில் 71 சதவிகிதம் உற்பத்தியாகும் பகுதி பாகிஸ்தானுக்குப் போய்விட்டது. ஆனால் ஆலைகள் முழுவதும் இந்திய யூனியன் பகுதியில். எனவே உள்ள ஆலைகள் வேலைசெய்யப் போதிய சணல் கிடைக்காமல் திண்டாடின. ஆனால் வாணிபம் வடநாட்டாருடையதாய் முழுக்க முழுக்க உள்ளபோது வாட்டம் ஏற்படுமா? அல்லது அப்படி ஏற்பட்டாலும் யூனியன் சர்க்கார் அதை அனுமதிப்பார்களா? உடனடியாக யூனியன் சர்க்கார் பாகிஸ்தானிடம் பேரம் பேசி, ஆலைகளுக்கு வேண்டிய சணல், ஆண்டுதோறும் கிடைக்க வழி செய்தது. இதற்குமுன் உலகம் முழுமையும் இந்தியச் சணல் சரக்குகள் தாம் செலவாகி வந்தன. தற்சமயம் பாகிஸ்தானும் ஐரோப்பிய நாடுகளில் சிலவும் சணல் ஆலைகளை நிறுவி சணல் சரக்குகளை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. எனவே போட்டிகள் முளைத்துவிட்டன. வடநாட்டு ஆலையரசர்களின் ஏகபோக இலாப வேட்டைக்கு இடையூறு நேர்ந்துவிட்டது. இந்நிலையை எங்ஙனம் சகிக்கும் 'நமது' பாரத சர்க்கார்? சென்ற மாதம் சணல் சரக்குகளின்மீது விதித்திருந்த ஏற்றுமதி வரி முழுவதையும், யூனியன் சர்க்கார் இரத்துசெய்து விட்டது. இச்சம்பவம் வரிகளை இரத்து செய்வதில் ஒரு பெரும் புரட்சியாகும்!

இதே நிலை தென்னாட்டில் மிளகு உற்பத்தியாளருக்கு ஏற்பட்டபோது, ஏற்றுமதி வரியை மேலும், மேலும் உயர்த்தி வெளிநாடுகளில் நமது மிளகுக்குக் கிடைத்துவந்த சந்தைகளைத் தொலைத்துக் கட்டும் கைங்கரியத்தில் 'நமது' பாரத சர்க்கார் ஈடுபட்டது. ஒரு புறத்தில் வடநாட்டு முதலாளிகளுக்குக் கொழுத்த, ஏகபோக வேட்டை--மற்றொரு புறம் வடநாட்டில் சணல் ஆலைகளில் ஏறத்தாழ 3 லட்சம் பேருக்குத் தொழில் கிடைத்துக்கொண்டிருக்கிறது. சணல் ஆலையில் பணிபுரியும் தொழிலாளிக்கு மாதமொன்றுக்குச் சராசரி ரூ. 58-8-0 கிடைப்பதாகச் சர்க்கார் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

சணல்--கொழுத்த இலாபமும், வளமுள்ள தொழிலும் அளிக்கும் ஒரு துறை. ஆனால் முழுக்க முழுக்க வடநாட்டில், வடநாட்டவர் ஆதிக்கத்தில்--பாரத சர்க்காரின் பேராதரவோடு, என்னும் நிலை, வளர்ந்துள்ள வடக்கின் வல்லமையை--தொழில்வளம் பெருகியுள்ளதை விளக்கத் துணைபுரிகிறது.

## ஈ.வே.கி.சம்பத்

வடநாட்டில் பெருகி நிற்கும் தொழில்வளத்தைத் துறைவாரியாகப் பிரித்துப் பிரித்துக் காட்டி, ஒவ்வொரு தொழில் துறையிலும் திராவிடம் தலைசாய்ந்து நொந்து கிடப்பதை ஏன் காட்டுகிறோம்? நீதி நெறியுரைப்பவர்களென்று தங்களை தாங்களே எண்ணிக்கொண்டிருக்கும் நாட்டை மறந்துவிட்ட சிலர், பொறாமைக்காரர்கள் என்று நம்மை அர்ச்சிப்பார்கள். "அடுத்தவன் வாழ்வதைக் கண்டு பொறாமதே; அது சிறு குணம். உன்னைச் சீரழித்துவிடும். நீ வாழ--அதுவும் நேரியவழியில் வாழ முயலு. அதுவே பெருங்குணம்" என்று, ஆதிமனிதன் காலத்திலிருந்து வழக்கில் உள்ள உபதேசத்தைச் செய்ய முற்பட்டு விடுவார்கள்.

சில நாட்களுக்கு முன் ஒரு செய்தி வந்தது: எங்கோ ஒரு ஊரில் ஒருவரது வீட்டில் நெற்குதிருக்கருகில் விரியன் பாம்புகள் தமது குழத்தை குட்டிகளோடு நிம்மதியாகக் குடித்தனம் நடத்திவந்தனவாம். எத்தனை பாம்புகள் தெரியுமா? முப்பத்திரண்டு பாம்புகள். வீட்டுக்காரரைத் திடீரென்று ஒரு பாம்பு கடித்ததாம். அதை அடித்தாராம். மற்றொன்று வந்ததாம். அதையும் அடித்தார்களாம். பின்னர் தேடிப்பார்த்தபோது, குதிருக்கடியில் முப்பது பாம்புகள் குடித்தனம் செய்வதைக் கண்டு பிடித்தார்களாம். அத்தனை பாம்புகளையும் அடித்துக் கொன்றுவிட்டார்கள், அந்தப் "பொல்லாதவர்கள்." அப்போது இந்த 'நல்லுபதேசிகள்' அங்கே தோன்றி "பாம்பின் நல்வாழ்வைக் கண்டு பொறாத பாதகர்களே, அவைகளின் வாழ்வைச் சிதைக்காதீர்கள்..." என்று உபதேசம் செய்திருப்பார்களா?

அமெரிக்காவோ, பிரான்ஸோ இரஷ்யாவோ தொழில் வளம் பெற்று சுகம் பெறுவதையும் தான் காணுகிறோம். உள்ளம் பொறுமுவதில்லை. ஆனால் அகில பாரதம் ஏக இந்தியா என்னும் விருதுகளோடு விளங்கும் இந்திய யூனியனில், வடபகுதி மட்டும் தொழில் வளத்தில் மிகுந்தும், சர்க்காரின் முழுக்கவனத்திற்கும், பராமரிப்புக்கும் பாத்திரமாகி மேலும் மேலும் சிறப்புகளைப் பெற்று ஒளி வீசுவதும், தென்பகுதி வளம் பெறாததோடு, உள்ளசிறப்புகளையும் நாளுக்கு நாள் இழந்து வருவதும், உள்ளத்தில் புயல் வீசிடச் செய்யாமல், குளிர்ச்சியையா ஊட்டும்? குளிர்ச்சியை ஊட்டும்--எவருக்கு? வளம்பெறும் வடவர் உள்ளங்கள் குளிர்ச்சி பெறும். வஞ்சிக்கப்பட்டு வாடும் திராவிடர் உள்ளங்கள் எப்படி குளிர்ச்சி பெறும்?

வெளிவந்து விட்டது!

நீலா நிலையத்தார் அளிக்கும் நல்லதோர் நாடக நூல்!

நடிக்கலாம்—படிக்கலாம்

எஸ். எஸ். தென்னரசு
எழுதிய

அத்தான்

கவின் மிகு முகப்பு — கண் கவர் அமைப்பு

விலை ரூ. 1—0—0

நீலா நிலையம்,
2-127 மவுண்ட்ரோடு, சென்னை-6.

# வெண்பாப் போட்டி

## 14. பொய்யடா பொய்யடா பொய்!

வெண்பாப் போட்டி 14-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ வேழமிற விற்றமிழன் விட்டகணை ஊடுருவி
வாழையிற்போய்த் தைத்தகதை வாய்மையடா--சூழ்வடவன்
எய்தகணை ஏழுகடல் போய்க்குளித்து மீண்டகதை
பொய்யடா பொய்யடா பொய்.

—ஜே. நட்சத்திரவதனு, கீழப்பாவூர்.

★

செய்ய வளங்கொழிக்கும் செங்கதிரோன் நல்வரவால்
உய்யுங் கமலம் உளங்குளிர--மெய்ம்மலரும்!
மெய்யிதுவே! பின்னேனோ 'வெய்யோன்' எனவுரைத்தார்?
பொய்யடா பொய்யடா பொய்.

—சுப. இளங்கோவன், சென்னை-15.

★

நாக்கு நுனிக்கண் நறுந்தேனும் நெஞ்சகத்து
நீக்கரிய நஞ்சும் நிலைபெற்ற--தீக்குணத்தோன்
மெய்போ லுரைக்கின்ற வெற்றுரைக ளத்தனையும்
பொய்யடா பொய்யடா பொய்.

—வித்துவான், சி. தங்கவேலு, சாமல்பட்டி.

★

காமக் கடல்மூழ்கிக் கன்னியர்பால் வேட்கையுற்று
காமவரை சேர்ந்திடுதல் நாட்டிலுள்ளோர்--காமனவன்
எய்த கணையினுல் என்றுரைப்பர் இக்கூற்றுப்
பொய்யடா பொய்யடா பொய்.

—க. வீ. வரதன், அயன்புரம்.

★

விஞ்ஞானம் போற்றி விரிவாக மேனுட்டார்
மெய்ஞ்ஞானக் கொள்கை விளக்குங்கால்--பொய்ஞ்ஞானர்
வெய்யோன் கரத்தல் விடப்பாம்பா லென்னுதலோ
பொய்யடா பொய்யடா பொய்.

—அ. செல்லப்பன், புதுவை.

★

தலைவி பரத்தையர் பக்கம் இருந்தால்
விலைமகள் ஆவாளோ வீரா?--அலையுயிரை
உய்வித்தாள் உத்தமியே! உன்மொழிகள் அத்தனையும்
பொய்யடா பொய்யடா பொய்.

—செ. பாலு, வேலூர் (வ. ஆ. மா)

★

குண்டுமழை பெய்யக் குருதிபொங்கி ஓடிடினும்
அண்டவிடோம் வடநாட்டார் ஆட்சியினை--மண்டியிட்டு
மெய்பணியோம்; கண்விழித்தோம்! மிஞ்சியவர் [ஆள்வதினிப்
பொய்யடா பொய்யடா பொய்.

—கே. எஸ். மாணிக்கம், சிவகங்கை.

★

வானமுகில் மோனமலை வளியோ டொளிப்பரிதி
தேனிலவும் தாரகையும் செந்தமிழும்--தானிருக்க,
ஐயயோ உலகம்பொய் என்றுரே! அத்தனையும்
பொய்யடா பொய்யடா பொய்.

—க. ஆ. கோவிந்தன், கந்தர்வகோட்டை.

★

களம்சென் றுயிரீந்த காளை நடராசன்,
அழகிரியும், தாளமுத்தும் மக்கள்--உளமதிலே
மெய்யுருவாய் வாழ்கின்றுர் மேலுலகம் சென்றதெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—அழ. சிதம்பரம். தாம்பரம்.

பதவி மயக்கால்நற் பண்பிழந்த வாழ்வும்
அதிகார போதையின் ஆர்ப்பும்--புதிதாக
எய்திய செல்வத் திறுமாப்பும் எந்நாளும்
பொய்யடா பொய்யடா பொய்.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

தாயவள்பொய் கண்காணுந் தண்ணெழில் பொய்,மழலைச்
சேயதுவுங் கீர்த்திதரு சீரும்பொய்--ஆயிழைதன்
மெய்யெழில்பொய் என்றமத மூடருரை யத்தனையும்
பொய்யடா பொய்யடா பொய்.

—அடைக்கலக்குஞளன், கோவிலூர்.

★

இன்னலில் காக்க இனியமுகங் காட்டிவரும்
அன்பு மனைவி யகத்திருக்க--என்றென்றும்
மெய்யடா கூறுகிறேன் வேசியிடம் உன்வாழ்வு
பொய்யடா பொய்யடா பொய்.

—எஸ். பி. சாய்ராம், சென்னை-21.

★

முப்பாலும் பாழாய் முடிவிலொரு சூனியத்திற்
கப்பாலே தெய்வம் உளதென்பார்--எப்போதும்
மெய்யெனநீ யெண்ணுதே மூடரிவர் சொல்முற்றும்
பொய்யடா பொய்யடா பொய்

—பெரி, இளந்திரையன், பாகனேரி.

★

நீர்க்குமிழி வாழ்வொத்த நிலையில்லாச் செல்வமதை
ஏர்உழவர்க் குதவாது எஞ்சவைத்து--பேர்உலகில்
எய்திடவே கோயில் எழுப்பின் விளைவிங்கு
பொய்யடா பொய்யடா பொய்.

—பொன். முத்து, சிவகங்கை.

★

கொன்னுகம் தேரைக் குணவு கொடுப்பதுண்டோ?
மண்ணுண்ட தோழா! வடநாட்டான்--தென்னுட்டைச்
செய்யநா டாக்குவேன், திண்ணம்நம் பென்றுரைத்தல்
பொய்யடா பொய்யடா பொய்.

—பா. சு. காசிநாதன், காலாப்பட்டு.

★

பூசை வடமொழியால் பொன்நாடு இந்தியால்
ஆசையுறக் கல்லூரி ஆங்கிலத்தால்--தேசுறுமச்
செய்யதொழில் செந்தமிழால் செய்யவொணு [தென்பதெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

மு. கோவிந்தன், கீழக்கல்பூண்டி.

★

புல்லேந்தி வந்தோர் புகழேந்து வேங்கைதமை
வில்லேந்தி வாளேந்தி வென்றதுவாய்--சொல்லேந்தும்
பொய்மைசேர் காவியங்கள் புன்மையுடைக் கூற்றெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—பாபன், நாங்குனேரி.

★

காதிலோர் சேதியென்று காதலியை தானழைத்து
மோதிவரும் இன்பத்தால் முத்தமிட்டேன்--மேதினியில்
மெய்யின்ப மேதுமில்லை மேலேஉண் டென்பதுமோர்
பொய்யடா பொய்யடா பொய்.

—மு. வைத்தியலிங்கம், பரங்கிப்பேட்டை.

★

கன்னியரைக் கற்பழித்துக் கட்குடித்துக் கூத்தாடும்
பன்னரிய தெய்வமதைப் பாராட்டின்--அன்னவரின்
மெய்யையிரு கூராக்க வேண்டுமவர் நாவெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—வளவன், வயலி.

★

மலரெனும்என் காதலியை மார்பில் அணைக்க
சிலம்பொடு சேர்ந்து வளையல்--புலம்பியதே
பையடா பையடா பைங்கொடி யாளிடை
பொய்யடா பொய்யடா பொய்.

—இரா. ப. மனோகரன், மதுரை.

★

கொட்டிக் கொடுத்திட்டால் மேலுலகம் பூசுரர்க்குத்
தட்டித் தரமறுத்தால் நீரகம்--கட்டுடலாய்!
உய்யவழி ஏதுமிலை உன்மத்தர் சொல்லனைத்தும்
பொய்யடா பொய்யடா பொய்.

—இரா. சிவஞான வள்ளல், வேலூர்.

★

அவனின்றி ஓரணுவும் ஆட்டமுரு--தென்றால்
புவியிலணு குண்டுகளைப் போடின்--அவிந்துவிடும்
வையமெலாம் என்கிறுரே! வைதிகனே! உன்னுரைதான்
பொய்யடா பொய்யடா பொய்!

—மு. சீனிவாசன், வத்தலக்குண்டு.

நெற்றி விழியை நெருப்பாகக் காட்டிடினும்
பொற்றமிழ் நக்கீரன் பேசினன்--நற்சத்தி
மைகுழலும் பூவின்றேல் மன்றல் தருமெனல்
பொய்யடா பொய்யடா பொய்.

—பூங்குயில், ஆரணி.

★

வெண்பூனை மேதினியில் மேவிற் றிருளென்றே
கண்மூடிக் கட்டுரைத்த காதைபோல்--மண்பெண்பொன்
பொய்யென்பார் தம்பற்றும் போக்கார்சொல் வேடநெறி
பொய்யடா பொய்யடா பொய்.

—கு. ப. தாயுமானசாமி, அய்யம்புதூர்.

★

செந்தமிழே உந்தனை சேர்ந்தொழிக்கும் இந்தியெங்கள்
நொந்த உளத்து நுதிவேலாம்--எந்தமிழர்
வெய்யவேல் கொண்டு விரட்டாமற் றுஞ்சுவது
பொய்யடா பொய்யடா பொய் !

—சு. வேங்கடேசன், வல்லம்.

★

மின்விளக்குக் கோயிலினுள் மெத்த அமைத்திடினும்
என்னும் வெளியுலகின் ஏக்கவிருள்உ இன்பமே !
மெய்யான 'பக்தி'யின்றி எய்யுமவர் பேறுதான்
பொய்யடா பொய்யடா பொய் !

—எஸ். ஆர். கோவிந்தராசன், சிக்கருயபுரம்.

★

பட்ட மரத்தில் படர்ந்த பசுமையையும்
முட்டா ளிடத்து முழுமதியும்--கெட்டிட்ட
நெய்யில் நனிஇனிப்பும் நீகண்ட தென்பதுவும்
பொய்யடா பொய்யடா பொய்.

—தி. கி. வேணி, இரும்பேடு.

★

பொன்னரிசி நீகொணர்வாய் போக்குமிளன் பாலுண்டு
ஒன்றுகச் சேர்த்தூதி உண்ணுவோம்--என்றகதை
மெய்யடா ! அவ்வடவர் நின்னலத்திற் காட்டுமன்போ
பொய்யடா பொய்யடா பொய் !

—எம். வி. இராணி, கோபாலசமுத்திரம்.

★

கன்னியரைப் பேயென்பர்; கல்லைக் கடவுளென்பர்;
இன்னுடலைக் காற்றுப்பை என்றிகழ்வர்;--வெண்பொங்கல்
நெய்யடிசில் மிக்குண்டு நோன்பென்பார் சொல்லெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

★

எண்டிசைகள் வென்றோன்; எழிற்கலைஞன்; நல்லறனைக்
கண்ணெனவே காத்தோன் கவின்தமிழன்;-தென்னிலங்கை
அய்யன் அரக்கனென அன்றுரைத்த கம்பனுரை
பொய்யடா பொய்யடா பொய்.

—செ. கிருஷ்ணசாமி, அரக்கோணம்.

★

செம்மை மனமின்றி சீர்பண்பும் இல்லாத
கம்பன் வகுத்த காகுத்தன்--தங்கதையில்
வையடா வையடாதீ வாழ்வில் அதுவேதான்
பொய்யடா பொய்யடா பொய்.

—இ. நைனுமலை, இராசிபுரம்.

★

சாதிமுறை, மேனுலகு, சார்மனு நூல், பார்ப்பான்தன்
மூதறிவு, பாரதத்தாய் மோகனங்கள்--ஈதெல்லாம்
தூய்தமிழர் நல்வினத்தைத் தூளாக்கச் சூழ்வார்தம்
பொய்யடா பொய்யடா பொய்.

—ஜே. கஸ்தூரி, பாவூர்சத்திரம்.

★

மாடு மனைசுற்றம் மைந்தரொடு தாய்தந்தை
ஈடில் பெருஞ்செல்வம் இத்துணையும்--நீடுலகில்
மெய்யென்று நம்பாதே மேதினியின் வாழ்வனைத்தும்
பொய்யடா பொய்யடா பொய்.

—பழ. ஆவிடையப்பன், பட்டுக்கோட்டை.

★

ஆதி பகவன்வர் தாய்தந்தை; வாசுகியா(ம்)
மா(து)இல்லாள்; ஊரோ மயிலையென்--றேதுமிலார்
மெய்ப்புலவர் வள்ளுவரின் மேலேற்றிக் கூறுமிவை
பொய்யடா பொய்யடா பொய்.

—தமிழவேள்- வேலூர்.

அள்ளி மடியிருத்தி ஆரத் தழீஇப்பின்
கள்முத்தம் ஈந்தாலும் எள்ளும்--விலைமகளிர்
"மெய்யின்பம் காசிலே" தான் என்பர் அவர்நட்பு
பொய்யடா பொய்யடா பொய் !

—து. கருப்புசாமி, சென்னை-23.

★

ஆற்றுது மக்க ளழுதகண்ணீர் பல்லரசைக்
கூற்றமாய் நின்று குலைத்தனவால்--ஆற்றூர்க்கு
உய்வளிக்க மாட்டாதா ராட்சி ! நிலைபெறுதல்
பொய்யடா பொய்யடா பொய்.

—மே. வீ. சம்பத், பவானிசாகர்.

★

உய்யவே நீவிரும்பின் ஒன்றுரைப்பேன் ஒண்டமிழா !
பையவே உன்னினத்தை, பைந்தமிழை--கொய்யவே
செய்சதியே பாரதப்பேர், ஐயகோ ! அக்கூட்டு
பொய்யடா பொய்யடா பொய்.

—மு. சி. வெங்கடாசலம், எம். ஏ. வகுப்பு, திருச்சி.

★

மும்மலம் நீக்கி முனிவகற்றி மீரணிந்த
பெம்மான் கமலத்தாள் சேர்ந்தக்கால்-.இம்மைத்
துயர்நீங்கும் இன்றேல் நரகம்காண் ! என்பதெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—என்கோ, சென்னை-23.

★

வையத்தை வாழவைக்கும் ஏரோட்டும் காலும்,
துயருற்று நீர்உலர்ந்த கண்ணும் உய்யவழி
செய்திடுகல் ஐந்தாண்டுத் திட்டமென்று செப்பலெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—நடனம், கடலூர், பு. நகர்.

★

தையலவள் கொய்யாவாம் கொய்யடா கொய்யாவை
துய்யடா மெய்யின்பம் ஒய்தலேன் ?--காயமே
மெய்யடா 'பொய்யடா காய'மென்பார் வாய்ச்சொல்லே
பொய்யடா பொய்யடா பொய்.

—இரா. நாராயணசாமி, திருநெல்வேலி.

★

ஒருதாரம் கொண்டிருக்க, ஒண்அணிமின் இந்தி
மறுதாரம் கொள்ளவிதி இல்லை;--பெருந்தமிழா !
மையலால் சென்றணைந்தால், வாழ்வெல்லாம் [கோவலன்போல்
பொய்யடா பொய்யடா பொய்.

—பா. வேலாசாமி, கோயமுத்தூர்.

★

முக்கண்ணன் என்பான்தான் முன்னொநாள் நந்தமிழை
'எக்காலும் போற்றிவளர்' என்றுசொலி--உக்கிப்போம்
மெய்க்குள் ளகத்தியன் பாலளித்தா னென்பதுதான்
பொய்யடா பொய்யடா பொய்.

—செ. நீதிவாணன், மதுரை.

★

மேனுடும் கீழ்நாடும் மேவிப் பறந்துலவி
நானு விதவிருந்தால் நற்பேச்சால்--வானளவு
எய்துபுக ழ்நாட்டை ஏற்றுவிக்கும் என்பதந்தோ
பொய்யடா பொய்யடா பொய்.

—நலங்கிள்ளி, அரக்கோணம்.

★

சோறே பெரிதென்பான் நம்நாட்டுக் 'கம்யூனிஸ்ட்'
ஏறுநடை வள்ளுவனே மானமென்பான்--கூறுநம்
தாய்நாட்டுப் பண்பெது ? தேரின்சோ றென்பான்சொல்
பொய்யடா பொய்யடா பொய்.

—பி. இராமச்சந்திரன், வடசேரி.

★

ஆரியம்தான் நாட்டில் அடிவைத்த நாள்முதலாய்
சீருயரும் வாழ்வு சிதைந்ததய்யோ--ஆரியத்தின்
செய்கைப் புராணங்கள் சாத்திரங்கள் அத்தனையும்
பொய்யடா பொய்யடா பொய்.

—வே. அர. சைலவாசன், வேலூர்.

★

" எய்துபொருள் பொய்யாகும் இன்பம் வெறும்பொய்மை
வையகமே பொய்" என்று வாய்கிழிவார்--மையிருளில்
பைநிறைப்பார், பாவையின்பம் பார்ப்பார்; அவர்வேடம்
பொய்யடா பொய்யடா பொய்.

ம. தங்கப்பா, கோபாலசத்திரம்.




அழகின் எழிலை, அழகின் அந்தரங்கத்தை, அழகின் தத்துவத்தை அறிந்துகொள்வது மிக மிக நுட்பமான விஷயமல்லவா?

கவிஞன் கண்கொண்டு அழகை ஆராய்வது, ஒரு இன்பமான ஆராய்ச்சிதான். அழகின் ஆழத்தை அறிந்து, அதன் நுட்பத்தை அனுபவிப்பதும் மிக மிகக் கஷ்டமான ஆராய்ச்சிதான்.

அழகில் ஆனந்தம் குடிகொண்டு, அழகு அகக்கண்ணில் வளரும் போது, ஆனந்தமும் வெறியோடு வளர்கிறது என்று கவிஞன் கீட்ஸ் அனுபவித்தே பாடியிருக்கிறான்.

இறைமுதல் இயற்கைவரை, அழகு தாண்டவமாடுகிறதென்றும், கவிஞன் கண்கொண்டு, அகக்கண்கொண்டு, தத்துவக் கண்கொண்டு அழகின் நுட்பங்களை அனுபவிக்கலாமென்றும் திரு. வி. க. அவர்கள் உறுதியாக கூறியிருக்கிறார்கள்.

ஆனந்தம் குடிகொண்ட அழகு சிரிக்கத்தானே செய்யும்! அழகு உயிரோவியமாக மலர்ந்து இன்பப் பூரிப்பில், சிரித்துக்கொண்டேதான் திரியும்: - துரும்பு முதல் கரும்புவரை ஆனந்தநடனம்தான். இசையின் இயக்கம் அழகின் பூரிப்பையே மலரச்செய்து விடுகிறதல்லவா? அழகின் சிரிப்பை, இயற்கையின் எழிலோவியத்திலே காணலாம் அழகியின் அருமையான முகமலர்ச்சியிலும் காணலாம்; குழந்தையின் சிரிப்பிலும், அழகு குமுறிக்கொண்டுதானே மலர்ந்து விடுகிறது.

கவிஞர் பாரதிதாசன் 'அழகின் சிரிப்பு' என்று தலைப்பைக் கண்டுபிடித்ததே ஒரு அதிசயம்தான். கவிஞன்தான் அழகின் சிரிப்பைக் கண்டுபிடித்து, அதைத் தன் இதயத்திலே, தன் கவிதையிலே குமுறிநிற்கச் செய்யும் ஆற்றல் படைத்தவன். கவிஞன் சிரிப்பே அலாதிதானே! அபூர்வமான சிரிப்பு, இயற்கையின் அழகுக்கே அழகு செய்யத் துணிந்து விடுகிறது.

இயற்கையின் பாஷையே, அழகின் சிரிப்புத்தான், என்று அமெரிக்கக் கவிஞன் எமர்சன் அறிந்தே கூறியிருக்கிறான். "விண்ணிலே வானவில்லைக் கண்டதும் என் இதயம் குதித்துக் கும்மாளியிடுகிறது" என்று சொல்லின் செல்வனான வேர்ட்ஸ் வொர்த் பாடுகிறான். இதெல்லாம் எதைக் காட்டுகின்றது?

கவிஞன் உள்ளத்திலே அழகு புகுந்துவிட்டால், அந்த அழகு அவன் கவிதையிலே கும்மாளியிடுவதும் திண்ணம். இதை நாம் பாரதிதாசன் கவிதையிலே காணலாம்:

"காலையிளம் பரிதியிலே
அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில்
கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே
தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில்
தட்டுப் பட்டாள்!
சிறு குழந்தை விழியினிலே
ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கிற் சிரிக்கின்றாள்;
நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின்
விரல்வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்;
.............................; என்
நெஞ்சில் குடியேறி
மகிழ்ச்சி செய்தாள்,
திசைகண்டேன், வான்கண்டேன்
உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும்
கண்டேன் யாண்டும்
அசைவனவும் நின்றனவும்
கண்டேன் மற்றும்
அழகுதனைக் கண்டேன்நல்
லின்பங் கண்டேன்

அழகின் எழில் இயற்கையிலே மண்டிக்கிடக்கிறதல்லவா? கவிஞன் உள்ளத்திலே, அழகு வெறி புகுந்து நர்த்தனஞ் செய்கின்றதல்லவா? பாரதிதாசன் பாஷையிலே, உணர்ச்சி மலர்ந்து கற்பனை மலர்ந்து, மொழி மலர்ந்து மணக்கின்றதல்லவா? சொற்கள் அரிய இனிய சொற்கள், தேன் துளிகளாகவே இனிக்கின்றன: தாய்மொழி, தமிழ் மொழி தித்திக்கிறது; அழகு உண்மையை எடுத்துக்காட்டுகிறது. அழகின் சிகரம் மொழியின் முடியாக நின்று உலாவுகின்றது.

'தென்றலை' வருணிக்கும்போது,

"அண்டங்கள் கோடி கோடி
அனைத்தையும் தன்னகத்தே
கொண்டஓர் பெரும் புரத்தில்
கூத்திடு கின்ற காற்றே!
திண்குன்றைத் தூள்தூ ளாகச்
செய்யினும் செய்வாய்! நீ ஓர்
நுண்துளி அனிச்சம் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்!"

மென் காற்றும், வன் காற்றும் இப்படிக் காட்சியளிக்கின்றன.

'நிலவும் குன்றும்' 'எழில்பெற்ற குன்றம்' எவ்வளவு அருமையான வருணனைகள்;

"நிலமுக் காட்டுக் காரி
நிலாப்பெண்ணாள்; வற்றக் காய்ந்த
பாலிலே உறையுமோர் ஊற்றிப்
பருவத்தால் கடைந்து, பானை
மேலுற்ற வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசி விட்டாள்!
ஏலுமட் டுந் தோழா நீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம்!"

உவமையின் உறுதி, கவிதையின்னலை உறுதியாக அணி செய்கிறது; இதுவே சொல்லோவியம்.

'ஒளி செய்யும் பரிதி' இது ஒரு அருமையான கருத்தோவியம்:

"கடலிலே கோடி கோடிக்
கதிர்க்கைகள் ஊன்று கின்றாய்!
நெடுவானில் கோடி கோடி
நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ
இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளி அளாவ
அமைந்தனை! பரிதி வாழி!"

'குயில் விருந்து' இது ஒரு நிகரற்ற இசைச் சித்திரம்:

"மழைமுகில் மின்னுக் கஞ்சி
மாங்குயில் பறந்து வந்து
வழங்குக குடிசை என்று
வாய்விட்டு வண்ணம் பாடக்
கொழுங்கிளைத் தோள் உயர்த்திக்
குளிரிலைக் கைய மர்த்திப்
பழந்தந்து களிப்பாக் கும்பின்
பசுந்துளிர் வழங்கும் ஆலே"

புறாக்களின் வருணனை அற்புதம்! அற்புதம்!! கவிஞனின் இயற்கையுள்ளம் புறாவைத் தழுவி நிற்கிறது.

புறாக்களின் காதல் ஒரு விசித்திரம்:

"தலைதாழ்த்திக் குடுகு டென்று
தனைச்சுற்றும் ஆண்புறாவைக்
கொலைபாய்ச்சும் கண்ணால்,
பெண்ணோ
குறுக்கிற் சென்றே திரும்பித்
தலைநாட்டித் தரையைக் காட்டி
'இங்குவா' என அழைக்கும்;
மலைகாட்டி அழைத்தாலுந்தா[n]
மறுப்பாரோ மையல் உற்றார்?"

பாரதிதாசனின் 'தென்னையு[ம்] பனையும், மாதுளையும்' அரு[மை]யான கருத்தோவியங்கள்; கவி[ஞ]ன் உள்ளம், அழகின் சிரிப்பிலே, உ[ண்]மையின் பூரிப்பிலே, தென்னைமர[மா]கவும், பனைமரமாகவும், மாது[ளைக்] கனியாகவும் மலர்ந்து விடுகிறது.

பாரதிதாசன் கவிதைகளி[ல்] நாம் காண்பது அழகின் சரங்க[ள்] அனுபவ இன்பவெறியிலே, தமி[ழ்] மொழி கவிஞன் கண்கொண்[டு] இயற்கையின் வனப்பிலே கும்மா[ளம்]யிடுகிறது. கவிஞரின் 'அழகி[ன்] சிரிப்பு' ஒரு அழியாச் சித்திர[ம்] கவிஞரின் உள்ளத்திலே, தமிழ்[ச்] சொற்கள் பறந்து சிறகடித்து வி[ளை]யாடுகின்றன.

—வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ.

# வள்ளுவன் மூத்தோன்!

காதல் உணர்ச்சியில் பெண்மையை நாணம் சூழும். சூழ்ந்தால்தான் பெண்மை முழுமை பெற்றதாகும். ஆடவனின் கண்களைப் பெண்ணின் கண்கள் மோதி ஒரு சேனையை உருவாக்கிவிட்டு நிலம் பார்த்து விடும்! அப்படியே வைத்த கண் வாங்காமல் பெண்மை நிற்காது. நாணமுள்ள பெண்மை கண்டிப்பாக நிற்காது! கண்ணும் கண்ணும் மின்னல்போல் மோதும். உடன் பெண்மையின் கண்கள் திசை மாறிப் பூமியைப் பார்க்கும். இதுதான் நெறி முறைமாதர்க்கு இயல்பு.

வள்ளுவனின் மூன்றும்பால் தலைவி அப்படிப்பட்டவள். தலைவனும் அப்படியே! தலைவன் நோக்கும் காலை, தலைவி நிலம் நோக்குவாள். நோக்காதபோது, தான் நோக்கி மெல்லநகுவாள், அவள் நோக்கிய நோக்குக்கு எதிர் நோக்கு வந்தால் சேனை உருவாகும். இந்தச் சிறு போரில் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில்லாமற் போய்விடும்! தலைவனும் தலைவியும் ஒருவர் கண்களை ஒருவர் பார்க்கிறவர்கள். அதிலே நாணங் கலந்த காதல் நிலை ஏற்படுகிறது!

கண்களைத் தவிர வேறு அவயவத்தை, காதலன் பார்க்கிறான்-ஒரே ஒரு குறளில். அது அவயவங்கூட அல்ல. அதன் மேல் போர்த்திருக்கும் துகில்தான். அங்கும், மதயானையின் முகபடாம் போன்றது என துகிலுக்கு உவமை கூறியே விளக்குகிறான் வள்ளுவன். அதுவும் தலைவியைச் சுட்டாமல் பொதுவாகக் மாதருடைய மேலாடை என்கிறான். காரணம், உயர்ந்த காதல்நிலை புலனாக வேண்டும் என்பதே! அப்போது காதலி, 'நிலநோக்கி' நிற்கிறாள். காதலனின் வேறு அவயவத்தைத் தேடவில்லை.

ஆனால், கம்பனார் காட்டும் தலைவி-சீதாபிராட்டியும், தலைவன் ராமபிரானும்-இதே நிலையில் சந்திக்கும்போது நிலைமை பயங்கரமாக உருவெடுக்கிறது.

கண்ணொடு கண்ணிணை ஒன்றை ஒன்று கவ்வி, உண்ணவும் நிலைபெற்றுணர்வு நீங்கிய பிறகு, அண்ணல் வேறொரு பகுதியை நோக்குகிறான்-அல்ல; தாக்குகிறான். அவளும் வேறொரு அவயவத்தில் ஆழ்ந்து விடுகிறாள். அண்ணல் நோக்கும் பகுதி மேலாடை-துகில் அல்ல! அதற்கும் உள்ளே இருக்கும் அவயவம். அதுவும் அண்ணலின் விழிகள் அதில் நறுக்கென்று தைக்கின்றன. சீதையின் கண்களைக் கவ்விய இராமபிரான் கண்கள், அதே சீதையின் மார்பகத்தில் தைத்து விடுகின்றன! சீதாபிராட்டியும் அவனுடைய தோளிலே ஆழ்ந்து விடுகிறாள். நிலம் நோக்காத நேரிழை-ஒரு கண் சிறக்கணித்தாற்போல் நகாத சேயிழை-கண்அளவு கொள்ளாத காரிகை-வைத்த கண் வாங்காமல் நேரிலைத் தாக்குதல் நடத்துகிறாள்! நாணம், அவளைத் தலைகுனிய வைத்ததாக இல்லவே இல்லை! நாணங் காணாத பெண்மையைப் பூரணம் பெற்றதாக திராவிட இலக்கியங்களில் காண முடியாது!

வள்ளுவனின் தலைவனும் தலைவியும் காணும் நிலை, "பக்குவமான காதல் நிலை."

கம்பனார் கைவண்ணங் காட்டும் சீதா-ராமர் நிலை "வெறி நிலை!" கம்பனார் கைவண்ணம் இது.

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளினாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்திற் றைத்தவே!
—மிதி. கா. ப. 36—

கண்ணதாசன்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.